Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 350 | செவ்வாய்க்கிழமை | ஐப்பசி 30 ஆம் நாள் 16 நவம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

## சகல பாடசாலைகளும் அடுத்தவாரம் ஆரம்பம்

நாட்டிலுள்ள சகல பாடசாலைகளும் அடுத்த வாரத்திலிருந்து முழுமையாகத் திறக்கப்படும் என்றும், 2022 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் கல்வித்

06

# இனப்பலமே ஆட்சிக்கான அத்திபாரம்!

### மாவை சேனாதிராசா தெரிவிப்பு



**வவுனியா, நவம்பர் 16**

**“இனப்பலம்தான் எமது தேசத்தையும் - மக்களையும் பாதுகாத்து ஆட்சியுரிமையை வழங்குவதற்கான அத்திபாரமாக இருக்கக்கூடும்” என்று - தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா தெரிவித்தார்.**

14



## சிங்களக் குடியேற்றத்துக்கு எதிராகப் பெரும் போராட்டம்

வவுனியா, நவ.16

வவுனியா மாவட்டத்தின் இனப்பரம்பலை மாற்றியமைக்க எடுக்கும் முயற்சிக்கு எதிராக, வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்றுக்காலை

14

## வீதியைக் கடந்த மாணவியை மோதிக்கொன்ற வாகனங்கள்!

### பாடசாலைச் சமூகத்தினர் போராட்டம்



கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாக பாதசாரிக் கடவையில் வாகனங்கள் மோதித்தள்ளியதில், பாடசாலை மாணவி ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றொரு

14

### முச்சந்தி முரளி



“அப்ப இவ்வளவு காலமும் அத்திபாரமே போடாமல் தான் வீடு கட்டிறம் எண்டு சனத்துக்கு கதை விட்டனியளோ...?”

## எரிபொருளுக்கு தட்டுப்பாடு வராது!

### வலுசக்தி அமைச்சர் உறுதி

கொழும்பு, நவ. 16

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை 50 நாள்களுக்கு தற்காலிகமாக மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும், இதனால் எரிபொருளுக்கு எவ்வித தட்டுப்பாடும் ஏற்படாது எனவும் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

14



## எரிபொருள் நிரப்ப குவிந்தனர் மக்கள்

யாழ்ப்பாணம், நவ. 16

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்மூடப்பட்டமையால், வடக்கு மாகாணம் உட்பட நாட்டிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் நிரப்பும் நோக்கில் மக்கள் குவிந்தனர்.

06

## காரைநகர் விபத்தில் இளைஞர் உயிரிழப்பு!



யாழ்ப்பாணம், நவ. 16

காரைநகர் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயம் அடைந்தார்.

காரைநகர் டிப்போவுக்கு சமீபமாக முச்சக்கரவண்டியும் மோட்டார் சைக்கிளும் மோதிய

06

## போதியளவு எரிபொருள் யாழ்ப்பாணத்தில்!

### மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 16

யாழ்ப்பாண மாவட்டத்தில் போதியளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது. எனவே, மக்கள் எரிபொருள் வாங்குவதற்கு வரிசையில் நிற்க வேண்டிய அவசியமோ, அதிகளவில் கொள்வனவு செய்யவேண்டிய தேவையோ இல்லை என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

06

## 23 இந்திய மீனவர்களுக்கும் ஒத்திவைக்கப்பட்ட சிறை!

### அவர்களின் உடைமைகள் பறிமுதல்

யாழ்ப்பாணம், நவ. 16

அத்துமீறி இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்த தமிழக மீனவர்கள் 23 பேரும் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையுடன் விடுவிக்கப்பட்டனர். எனினும், அவர்களின் உடைமைகள் இலங்கை அரசால் கையகப்படுத்தப்பட்டன.

06

## திருமணத்தில் 100 பேர் மரணச் சடங்கில் 20 பேர்

### மேலும் பல கட்டுப்பாடுகளோடு புதிய சுகாதார வழிகாட்டி வெளியீடு

கொழும்பு, நவ. 16

கொரோனாத்தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் புதிய சுகாதார வழிகாட்டியை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

அதன்படி, திருமண மண்டபங்களில் 100 பேருக்கு மேல் ஒன்றுகூடமுடியாது. மரணச் சடங்கில் 20 பேர் மாத்திரமே பங்கேற்கலாம் என்பது உள்ளிட்ட பல கட்டுப்பாடு

14

# எஞ்சிய நினைவுகளை துடைத்தழித்து விடாதீர்

## ஆயர்மன்றிடம் பொ.ஐங்கரநேசன் கோரிக்கை



**யாழ்ப்பாணம், நவ. 16**

**மக்கள் மனங்களில் எஞ்சியுள்ள நினைவுகளையும் துடைத்தழித்து, வரலாற்றைத் திரிபுபடுத்த வேண்டாம் என்று ஆயர் மன்றிடம், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

வடக்கு - கிழக்கு ஆயர் மன்றம், போரால் உயிரிழந்தவர்களுக்கான நினைவு நாளாக நவம்பர் மாதம் 3ஆவது சனிக்கிழமையைக் கடைப்பிடிக்குமாறு அழைப்பு விடுத்துள்ளது. தமிழ் மக்கள் போராடி மடிந்த வீரமறவர்களின் நினைவாக நவம்பர் மாதம் 27ஆம் திகதி மாவீரர் நாளையும், போரால் இறந்த பொதுமக்களின் நினைவாக மே மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் தினத்தையும் படையினரின் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் கடைப்பிடித்து வருகின்றனர்.

கூட்டுப் பிரார்த்தனைகளைப்போன்று கூட்டு அஞ்சலிகளுக்கும் வலிமை மிக அதிகம். அதனாலேயே வெவ்வேறு காலப்பகுதிகளில் கூட்டு நினைவுநாள்கள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. இவை எழுந்தமானமான தெரிவுகள் அல்ல. ஒவ்வொரு திகதியும் தன்னகத்தே தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தின் முக்கியமான வரலாறுகளைப் பொதிந்து வைத்திருக்கின்றது. இந்தத்தினங்கள் தமிழ்த் தேசிய இனத்தின் வலிமிகுந்த போராட்ட வரலாற்றைச் சந்ததிகள் தோறும் கடத்தும் வரலாற்றுக் கடத்திகளாகும்.

இலங்கை இராணுவம் போர் முடிந்த கையோடு, மாவீரர் துயிலும் இல்லங்களை இருந்த சுவடே தெரியாமல் அழித்தொழித்தது. விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றை, போராட்டத்தின் நியாயப்பாடுகளை மக்கள் மனங்களில் பதியவைக்கும் வரலாற்றுக் கடத்திகளாக இவை அமைந்துவிடும் என்பதே இதற்கான காரணமாகும். இதேபோன்றே, மாவீரர் நினைவுநாளை மாற்றியமைப்பதும் அமைந்து விடும்.

அந்தவகையில், மாவீரர் நாளை ஆயர் மன்றம் மாற்றியமைப்பது, படையினர் மாவீரர் துயிலுமில்லங்களைத் தகர்த்தமைக்கு ஒப்பானதாகிவிடும்.

தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாடுகளைச் சர்வதேசங்களுக்கு எடுத்துச்சென்ற வெள்ளைப் போராளிகளாக கத்தோலிக்க ஆயர்கள் மற்றும் குருவானவர்கள் பலர் இருந்துள்ளனர். அவர்கள் சார்ந்த அமைப்பிடமிருந்து கெடுபிடிகளைக் காரணம் காட்டி இந்தக் கோரிக்கை எழுந்திருப்பது தமிழ் மக்களிடையே பெருங்கவலையைத் தோற்றுவித்துள்ளது.

எனவே, ஆயர் மன்றம் தங்களது இந்த முடிவை மீள்பரிசீலனை செய்து, தென்னிலங்கையில் மக்கள் விடுதலை முன்னணியினர் இறந்த தங்கள் தலைவர்களின் நினைவுகளைக் கார்த்திகை வீரர்கள் தினமாக வெளிப்படையாகவே கடைப்பிடிப்பதைப்போன்று, தமிழ்மக்களும் போரில் இறந்த போராளிகளினதும், பொதுமக்களினதும் நினைவுநாள்களைக் கடைப்பிடிக்கும் உரித்துடையவர்கள் என்பதை நிலைநாட்டுவதற்குத் தொடர்ந்து குரல்கொடுக்க வேண்டும்- என்றுள்ளது. (ம-4)

## முன்னாள் எம்.பிக்கள் உட்பட மூவருக்கு மன்று பிடியாணை

கொழும்பு, நவ.16

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான வீரகுமார திஸாநாயக்க, பியசிறி விஜேநாயக்க மற்றும் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ரொஜர் செனவிரத்ன ஆகியோரை கைது செய்யுமாறு கொழும்பு பிரதான நீதிவானால் நேற்று பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வழக்கு நடவடிக்கைகளுக்காக நீதிமன்றில் முன்னிலையாகாததன் காரணமாகவே இவ்வாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் அல் ஹூசைன் 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி இலங்கைக்கு விஜயம் செய்த போது, பௌத்தலோக மாவத்தை மற்றும் ஹெவ்லொக் வீதிகளில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் ஆர்ப்பாட்டம் செய்தனர் என அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இந்த வழக்கை அடுத்த வருடம் மார்ச் 7 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு பிரதான நீதிவான் நேற்று உத்தரவிட்டுள்ளார். (ச-இ)

## விண்ணப்பம் கோரல்

கொழும்பு, நவ.16

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் மருத்துவபீட உளமருத்துவபீடத் துறையால், உளவளத்துறை டிப்ளோமா கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

22 முதல் 50 வயதுக்குட்பட்ட க.பொ.த. உயர்தரத்தில் எந்த பிரிவிலும் 3 பாடங்களில் சித்தியடைந்த, குறைந்தது ஆங்கிலத்தில் திறமைச் சித்தியடைந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டதாரிகள், ஆசிரியர் பயிற்சி, தாதியர் பயிற்சி சான்றிதழ் உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்களை http://medical.sjp.ac.lk எனும் இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்து, எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பிக்கலாம். (ம-4)

## சமய தீட்சை வழங்கல்

யாழ்ப்பாணம், நவ.16

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நாளைமறுதினம் 18ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஆலய மண்டபத்தில் சமய தீட்சை வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

சமய தீட்சை பெற விரும்பும் அடியவர்கள் கலந்து கொண்டு சமய தீட்சையை பெற்றுக் கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)




## வடிகாலமைப்பு ஏற்படுத்தக் கோரி கல்லுண்டாய் மக்கள் போராட்டம்!

யாழ்ப்பாணம், நவ.16

கல்லுண்டாய் புதிய குடியிருப்பைச் சேர்ந்த மக்கள், தங்கள் பகுதிக்கு வடிகாலமைப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி, நேற்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர். சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கல்லுண்டாய் புதிய குடியிருப்பு, மழைகாலங்களில் வெள்ளத்தில் மூழ்குகின்றது என்றும், இது தொடர்பாக பலருக்குத் தெரியப்படுத்தியபோதும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். பேரிடர்களிலிருந்து பாதுகாத்திடு, உரிய வடிகாலமைப்புத் திட்டங்களை செயற்படுத்து, நமக்கான வாழ்க்கையை உறுதிப்படுத்து, மற்றும் எங்கள் பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகளை உணருங்கள், வெள்ளப் பெருக்கைத் தடுத்து நிறுத்து, இயற்கைப் பாதிப்புகளிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தக் குடியிருப்பில் 85 குடும்பங்கள் வாழ்கின்றன. ஒவ்வொரு வருடமும் மழை காலத்தில் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்து, இடம்பெயரும் நிலைமையே இருக்கின்றது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கோரி கடந்த ஆண்டு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினோம். தீர்வு எதுவும் கிடைக்கவில்லை, அதனால் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக இப்போது ஆர்ப்பாட்டம் நடத்துகின்றோம் என்று மக்கள் தெரிவித்தனர். (எ-20)



## குடிதண்ணீரின் நிர்ணய விலையை நீக்குமாறு உற்பத்தியாளர் சங்கம் லசந்தவிடம் கோரிக்கை

கொழும்பு, நவ. 16

போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீரின் விதிக்கப்பட்ட நிர்ணய விலையை நீக்குமாறு நுகர்வோர் விவகார இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்னவிடம் தண்ணீர்ப் போத்தல் உற்பத்தியாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

நுகர்வோர் அதிகார சபையினால் அறிவிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்டு, போத்தல் குடிதண்ணீரை 10 ரூபா முதல் 20 ரூபா வரை அதிகரிக்க அனுமதி கோரப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட லேபிள்கள், ஆய்வக உபகரணங்கள் மற்றும் பிளாஸ்ரிக் போத்தல்கள், பிளாஸ்ரிக் மூடிகள் ஆகியவற்றின் விலைகள் அதிகரிப்பதன் காரணமாக நிர்ணயிக்கப்பட்ட விலையில் வியாபாரம்செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என உற்பத்தியாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அனைத்து போத்தல் தண்ணீருக்கும் இலங்கை தர நிலைகளை கட்டாயமாக்குவதற்குத் அங்கீகாரம் வழங்குமாறும் தொழிற்றுறையினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ய)

# முறையற்ற மணல் வியாபாரத்தால் கிராம அலுவலர்களுக்கு அழுத்தம்

**முல்லைத்தீவு, நவ. 16**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் பிரதேசத்தில் முறையற்ற மணல் வியாபாரிகளால், தாம் மன உளைச்சலுக்கு ஆளாக்கப்படுகின்றோம் என்று கிராம அலுவலர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானிடம் முறையிட்டனர்.**



துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் கனிய வளங்களை அகழ்வது தொடர்பான அனுமதிகளை வழங்குவது தொடர்பான கூட்டம், துணுக்காய் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

கூட்டத்தில் கலந்துகொண்ட கிராம அலுவலர்கள் மணல் வியாபாரிகளால் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் எடுத்துக்கூறினர்.

கூட்டத்தில் மணல் அகழ்வு மற்றும் கனியவளங்கள் தொடர்பில் முடிவுகள் எடுக்கப்பட்டன. மணல் விலையைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

சுற்றாடலைப் பாதிக்கும் வகையில் மணல் அகழ்வு மேற்கொள்வதற்கு அனுமதி வழங்குவது இல்லை என்று தீர்மானிக்கப்பட்டது.

கிராம சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழுவால் நிராகரிக்கப்பட்ட மருதங்குளம் பகுதியில் மணல் அகழ்வுக்கான அனுமதியை நிறுத்தி, உரிய முறையில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

துணுக்காய் பிரதேச செயலர் திருமதி ஆ. லதுமீரா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், கனியவளத் திணைக்கள அதிகாரிகள், வனவளத்திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலக அதிகாரிகள், கிராம அலுவலர்கள், சுற்றுச்சூழல் அதிகார சபையினர் எனப் பலர் கலந்து கொண்டனர். (ம-4-19)

# இறப்பு வீட்டில் பணம் திருட்டு

சாவகச்சேரி, நவ. 16

இறப்பு வீட்டில் ஒரு தொகை வெளிநாட்டு நாணயங்கள் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் சாவகச்சேரியில் இடம்பெற்றுள்ளது. வீட்டிலிருந்து இறுதி ஊர்வலம் புறப்பட்ட வேளையில், வெளிநாட்டிலிருந்து வந்தவர்களால் கொண்டுவரப்பட்ட பயணப் பைகளுக்குள் வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டு நாணயங்களே திருடப்பட்டுள்ளன.

திருட்டுபோன தொகையின் பெறுமதி இலங்கை மதிப்பில் சுமார் 5 லட்சம் ரூபா வரையிலாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4,9)

# பனை மர குற்றிகளுடன் ஒருவர் கைது

சாவகச்சேரி, நவ. 16

அனுமதியின்றி வீட்டுப் பாவனைக்கு ஏற்ற வகையில் தறிக்கப்பட்ட பனை மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற நபர், மிருசுவில் பகுதியில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாகனத்தில் ஏற்றிச்செல்லப்பட்ட பனை மரக்குற்றிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-4,159)




# ‘கார்த்திகை வீரர் தினம்’ யாழிலும் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், நவ. 16

மக்கள் விடுதலை முன்னணியின் ஸ்தாபகத் தலைவரான ரோஹன விஜேவீர மற்றும் ஏனைய கொல்லப்பட்ட உறுப்பினர்களின் ஞாபகார்த்தமாக அனுஷ்டிக்கப்படும் ‘கார்த்திகை வீரர்கள் தினம்’ யாழ்ப்பாணத்தில் கடந்த 13ஆம் திகதி சனிக்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது.

கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளரும், மத்திய குழு உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில், யாழ்ப்பாணத்திலுள்ள கட்சி அலுவலகத்தில் பிற்பகல் 2.30 மணியளவில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இந்த நினைவுதினம் இடம்பெற்றது இதுவே முதற்தடவையாகும். படுகொலை செய்யப்பட்டவர்களை நினைவுகூரும் வகையில் தீபங்கள் ஏற்றப்பட்டதுடன் மலரஞ்சலியும் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது அக்கட்சி உறுப்பினர்கள் சுகாதார நடை முறைப்படி நினைவேந்தலில் கலந்து கொண்டனர். (ம-125)

# குருதிக்கொடை



கிளிநொச்சி, நவ.16

கிளிநொச்சி, சாந்தபுரம் கிராமத்தில் நேற்று மு.ப. 10 மணிக்கு குருதிக் கொடை வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

கிளிநொச்சி, சாந்தபுரம் கிராமத்தில் பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்கள் மற்றும் உயர்தர மாணவர்களின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில், பிரதேசத்தைச் சேர்ந்த இளையோர், கிராம மட்ட அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு குருதிக்கொடை வழங்கினர். (ரி1-6)




**கொழும்பில ஆர்ப்பாட்டம் செய்த கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர்கள் 15 பேருக்கு கொரோனா எண்டொருகதை ரண்டு, மூண்டுநாளா வெப்சைட்டுகளில சுத்தித்திரியுது. அதை உண்மை எண்டு நம்பி சில ஊடகங்களும் பெரிசா போட்டிருந்திச்சினம். ஆனால், அப்பிடி அந்த ஆர்ப்பாட்டத்தில கலந்துகொண்ட ஆருக்கும் கொரோனா வரவே இல்லை எண்டதுதான் உண்மை.**

**அப்ப ஏன் இப்பிடி ஒரு கதை வந்தது எண்டு உங்களுக்கு கேள்வி வரும். அங்கதான் இருக்குது சங்கதி.**

**கல்வியியல் கல்லூரியில படிச்சு முடிச்சவைக்கு கல்விமாணி எண்ட பட்டம் குடுக்கிற திட்டமொண்டு இருக்கு. அதுக்கு முதலில இந்தக் கல்வியியல் கல்லூரியள் கம்பஸ் மாதிரி மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கீழ சுயாதீனமாக இயங்குற நிலைமை வரோணும். அப்பிடி ஒரு ஏற்பாட்டைச் செய்து, தரமுயர்த்தச் சொல்லி கல்வியியல் கல்லூரிக்காரர் போராடத் தொடங்கியிருக்கினம்.**

**இதேமாதிரி தேசிய கல்வி நிறுவகக்காரரும் தங்களையும் கம்பஸ் மாதிரி சுயாதீனமா இயங்கவிட்டு, தரமுயர்த்தச் சொல்லிக் கேக்கினம். அவையும் ஏற்கனவே கல்வி மாணி, கல்வி முதுமாணி எண்டு பட்டங்களை ஆசிரியர்மாருக்கு குடுக்கினம். ஆனால் அந்தப் பட்டங்களின்ர செல்லுபடி எந்தளவு எண்டு கனக்க கேள்வியள் இருக்கு. பொதுவா ஒரு பட்டம் எல்லா இடத்துக்கும் பொருந்த வேணும். ஆனால் தேசிய கல்வி நிறுவகம் குடுக்கிற பட்டங்கள் ஆசிரிய சேவைக்கு மட்டும்தான் செல்லுபடியாகும். வேற ஒண்டுக்கும் அதை கணக்கில எடுக்காயினம். அதை மாத்தி அந்தப் பட்டங்களின்ர தராதரத்தை எல்லா இடத்துக்கும் கணிக்கிற மாதிரி செய்யத்தான் அவையும் ( தேசிய கல்வி நிறுவகக்காரரும்) கோரிக்கை விடுகினம்.**

**இப்பிடி ஆசிரியர்மாரோட சம்பந்தப்பட்ட பட்டத்துக்காக ரண்டு அமைப்புக்களும் மாறி மாறி போராடி, இப்ப அந்த ரண்டு அமைப்புகளுக்கையும் ஏட்டிக்குப் போட்டி எண்ட மாதிரி வந்திட்டுது. அவையை இவையும், இவையை அவையும் எதிர்க்கிற அளவுக்கு நிலைமை போட்டுது.**

**இப்பிடிப்பட்ட நிலையிலதான் கொழும்பில போய், பார்லிமெண்ட் ரவுண்டபோட்டில இருந்து இசுறுபாய மட்டும் கல்வியியல் கல்லூரி லெக்சரர்மார் இந்த எட்டாம் திகதி ஆர்ப்பாட்டம் செய்தவை. அதுக்கு யாழ்ப்பாணத்தில இருந்தும் போனவை. ஆர்ப்பாட்டம் எல்லாம் முடிஞ்சு அவையவை தங்கட இடத்துக்கு போனபிறகு, இப்ப அதில கலந்து கொண்ட பதினைஞ்சு பேருக்கு கொரோனா எண்டு கதைகட்டுப்பட்டு வெப்சைட்டுகளில பரப்பப்பட்டுக் கொண்டிருக்கு.**

**இப்பிடி இல்லாதது பொல்லாதது எல்லாம் சொல்லி ஒரு நல்ல நோக்கத்துக்காக நடக்கிற போராட்டத்தை குழப்ப ஆரோ நினைக்கினம். அது அரசாங்கமா? இல்லாட்டி.....?**



- பட்சி

# இனப்பரம்பலை மாற்றும் முயற்சியை நிறுத்துங்கள்

## ஜனாதிபதி கோத்தாபயவுக்கு மனு

**வவுனியா, நவ.16**

**தவறான கொள்கைகளாலும், பௌத்த சிங்கள பேரினவாதத்தாலும் இந்த நாடு ஆளப்படும்வரையில் நாட்டுக்கு விமோசனம் கிடைக்கப்போவதில்லை. வடக்கில் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிறுத்தவேண்டும்.**

இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு மனு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் திட்டமிட்டு இனப் பரம்பலை மாற்றியமைக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதைக் கண்டித்து, நேற்று நெடுங்கேணியில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அந்த ஆர்ப்பாட்டத்தின் பின்னர், ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவுக்கான மனு ஒன்று வவுனியா வடக்கு பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டது. அந்த மனுவிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்த மனுவில் மேலும் உள்ளதாவது;

கடந்த காலங்களில் எமது மாவட்டத்தில் வடக்கு மாகாணத்தை பூர்வீகமாகக் கொண்டிராத வேறு மாகாணத்தை பூர்வீகமாகக் கொண்ட பலர் திட்டமிட்டு குடியமர்த்தப்பட்டார்கள். வவுனியா- வடக்கு பிரதேச செயலர் பிரிவிலும் வெங்கலச்செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவிலும் இந்தக் குடியேற்றச் செயற்பாடுகள் மிகவும் இரகசியமாக மாவட்ட நிர்வாகிகளுடனோ, மக்களுடனோ கலந்துரையாடப்படாமல் நடைபெற்றன.

இது எமது மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமல்ல, சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் மத்தியிலும் பெரும் சந்தேகத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது . வேறு மாகாணங்களில் இருந்து வந்து குடியேற்றப்படும் சிங்கள மக்களால் தமது பூர்வீகத்துக்கும் தமது வாழ்வியல் முறைகளுக்கும் தனித்துவத்துக்கும் இடையூறு ஏற்பட்டு தாம் இரண்டாந்தரப் பிரஜைகள் ஆக்கப்பட்டு விடுவோம் என்ற அச்சம் எமது மாவட்ட தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

போரால் இடம்பெயர்ந்த மக்கள் தமது காணிகளில் மீளக்குடியமர பல்வேறு அரச திணைக்களங்களால் தடை ஏற்படுத்தப்படுகின்றது. வனவளத்திணைக்களம் மக்களுடைய காணிகளை எல்லைக் கல்லிட்டு மீள்குடியமர்வதைத் தடுத்து வருகிறது.

திட்டமிட்ட குறிப்பிட்ட ஓரின மக்களை மட்டும் முன்னிலைப்படுத்தி செய்யப்படுகின்ற குடியேற்றமானது எமது மாவட்டத்தின் இன விகிதாசாரத்தை மாற்றுகின்ற உள்நோக்கோடு செய்யப்படும் செயலாகவே நாம் கருதுகிறோம்.

2014ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்ட மணலாறு பிரதேச செயலர் பிரிவின் (வெலிஓயா பிரதேச செயலர் பிரிவு) நிர்வாகத்தினுள் இருந்த 5 கிராம அலுவலர் பிரிவுகள் கஜபாபுர, அத்தாவெட்டுனுவெவ, நிக்கவெவ, மொனராவெவ, கல்யாணபுரவின் ஒரு பகுதி ஆகியன வவுனியா வடக்கு பிரதேச சபையுடன் இணைக்கப்பட்டன. இன்றுவரை அந்தப் பகுதிகள் முல்லைத்தீவு நிர்வாக மாவட்டத்தாலேயே நிர்வகிக்கப்படுகின்றன.

எமது பாரம்பரியப் பிரதேசத்தில் சிங்கள மக்களைக் குடியேற்றும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் அதேவேளை வடமத்திய மாகாணத்தின் அநுராதபுர மாவட்டத்தில் உள்ள மூன்று கிராமஅலுவலர் பிரிவுகளை வவுனியா மாவட்டத்துடன் இணைப்பதற்கான வேலைத்திட்டமும் மேற்கொள்ளப்படுகிறது .இந்தச் செயற்பாடானது மேலும் இன விகிதாசாரத்தில் பெரும் மாற்றத்தை மிக துரிதகதியில் நடைமுறைப்படுத்துவதற்கான ஓர் உத்தியாகவே நோக்கவேண்டியுள்ளது -என்றுள்ளது. (எ-110)


**சாவகச்சேரி பிரதேசசபை – கொடிகாமம்.**

**வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2022**

2022 ஆம் ஆண்டுக்கான கீழ்குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள். சேவைகள் வழங்கு வதற்கு பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள். உற்பத்தியாளர்கள். ஒப்பந்த காரர்கள். அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள். வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவை யாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 31.12.2021 வரை அலுவலக நாட்களில் விண்ணப்படிவங்களை ரூபா 1000.00 மற்றும் பொருத்தமான வரிகளை செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும் என்பதோடு விண்ணப்ப படிவமும் அத் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| | பொருள்களை வழங்குதல் (பொது) |
| A1 | காகிதாதிகள், எழுதுபொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்கள் |
| A2 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம்/உருக்கு) |
| A3 | கணணிகள் மற்றும் கணணியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள் தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள், றிபன்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள். |
| A4 | யன்னல், திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள். |
| A5 | நீர்க்குழாய்கள், குழாய் இணைப்புகள், மற்றும் அதனோடு இணைந்த பொருட்கள். |
| A6 | கட்டட இரும்பு பொருட்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் காட்வெயர் பொருட்கள் |
| A7 | மின்சார பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டர்கள், மின்குமிழ்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருட்கள். |
| A8 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை. |
| A9 | மோட்டர் வாகன உதிரிப்பாகங்கள், ரயர், ரியூப் மற்றும் ஏனையவை, |
| A10 | தோல் உற்பத்தி பொருட்கள், சப்பாத்துக்கள். மழைக்கவசம் |
| A11 | இறப்பர் முத்திரைகள் |
| A12 | நூலகங்களுக்கான நூல்கள். |
| | பொருள்கள் வழங்குதல் (மருத்துவம்) |
| A13 | சித்த மருத்துவ மருந்துகள் |
| A14 | மருத்துவ உபகரணங்கள் |
| | சேவை விபரம். |
| B1 | உருக்கு மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல். |
| B2 | மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல். (தொலைநகல் இயந்திரம், நிழற்பட இயந்திரம்.) |
| B3 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரம், மின் விசிறிகள், ஜெனரேற்றர்கள் திருத்துதலும் மீள முறுக்குதலும். |
| B4 | பதிப்பக வேலை – சகல வித படிவங்கள் - ஏனையவை. |
| B5 | கட்டட திருத்த வேலை, உள்ளக தொலைபேசி பராமரித்தல் |
| B6 | வாகனங்களுக்கான ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள். |
| B7 | கணணிகள் பழுது பார்த்தலும், சேர்விஸ் செய்தலும். |
| | வாகனத்திருத்தமும் சேர்வீஸ் செய்தலும். |
| C1 | சகல விதமான வாகன திருத்தமும், வாகன உட்பக்கம், சீற்கவர் என்பவற்றுக்கான குசன் வேலைகள். |
| C2 | சகல விதமான வாகனங்களும் சுத்திகரிப்பு செய்தல். |
| | ஒப்பந்தகாரர் பதிவு செய்தல். |
| D | • இக்ராட் பதிவு உடையவராக இருத்தல். • பதிவின் போது இக்ராட் பதிவு புத்தகம் சமர்ப்பிக்க வேண்டும். • பதிவின் போது இக்ராட் பதிவுத்திகதி காலவதியற்றதாக இருத்தல் வேண்டும். • செய்யப்பட்ட வேலைகளின் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும். |

**நிபந்தனைகள்.**

1. வழங்கல்கள்/ சேவைகள் 2022ம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
2. **ஒவ்வொரு உருப்படிகளிற்கும் தனித்தனியாக கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்**
3. பதிவுசெய்த வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் தேவை ஏற்படின் அதற்கு புறம்பான வழங்குநர்களிடமும் விலைமனுக்களை கோரி உரிய நடைமுறைகளின் பிரகாரம் பொருட்களை கொள்வனவு செய்யும் உரிமையும் பிரதேசசபைக்கு உண்டு
4. விண்ணப்பங்களை கடித உறையின் இடதுபக்க மூலையில் வழங்கல் சேவைகளிற்கான விண்ணப்பம் -2022 எனக்குறிப்பிட்டு தவிசாளர் / செயலாளர் சாவகச்சேரி பிரதேசசபை. கொடிகாமம் என்னும் முகவரிக்கு 31.12.2021 திகதிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பிக்கப்படவேண்டும்
5. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் 0212050356 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

**திரு.க.வாமதேவன்**
**தவிசாளர்,**
**சாவகச்சேரி பிரதேசசபை,கொடிகாமம்.** 16.11.2021

(cr.35899) (2.6)



# மரண அறிவித்தல்

பிறப்பு 11 • 08 • 1951



இறப்பு 15 • 11 • 2021

**இராஜயோகமணி (பவா)**

காலம் சென்ற ரத்னவேல் அவர்களின் அன்பு மனைவி இராஜயோகமணி ( பவா ) நேற்று (15.11.2021) திங்கட்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலம்சென்றவர்களான இராசா தங்கமுத்துவின் மகளும், காலம் சென்றவர்களான கணபதிப்பிள்ளை இராசலக்சுமி தம்பதியரின் மருமகளும் காலம் சென்ற ரத்னவேல் ( சின்னப்பு ) அவர்களின் அன்பு மனைவியும், தக்சன், தர்சன், சேந்தன் ஆகியோரின் பாசமிகு அம்மாவும், பிரியாவின் அன்பு மாமியும், பாலேந்திரா (கனடா) காலம் சென்றவர்களான இராஜேஸ்வரி, கொங்காதேவி ஆகியோரின் சகோதரியும், பாக்கிய லஸ்சுமி, விஜயவேல் (சோமு), காலம் சென்றவர்களான நடேசரட்ணம் (செல்வம்), இராசவேல், கனகலட்சுமி (ராணி) ஆகியோரின் மைத்துனியும், காலம் சென்ற பெறாமகள் ஆர்த்திகா, மற்றும் பிரசாத், வினோத், பாரத், பற்குணராஜா, துர்க்கா ஆகியோரின் சித்தியும், கயன், பிரியா ஆகியோரின் பெரியம்மாவும், சர்மிளா, திவாகர், கணேசவேல், அபிராமி ஆகியோரின் மாமியும் ஆவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2021 ) செவ்வாய்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் வழுக்கையாறு இந்து மாயனத்துக்கு எடுத்துசெல்லபடும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

**R.தக்சன் 077621 7309**
**R.தர்சன் 077311 1223**
**R.சேந்தன் 077 271 8844**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**பங்குறு வீதி, வட்டு தென்மேற்கு**
**வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம்.**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வெள்ளம் தலைக்கு மேல்...!

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டு 51 ஆண்டுகளின் பின்னர், முதல்முறையாக அங்கு எண்ணெய் சுத்திகரிப்புப்பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. 50 நாள்களுக்கு அங்கு எண்ணெய் சுத்திகரிப்புப் பணிகள் நடைபெறாது என்று வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில கூறியிருக்கிறார்.

கையிருப்பில் இருந்த கச்சா எண்ணெய் தீர்ந்தமையாலேயே சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டிருக்கின்றது. அரசும், அமைச்சரும் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்று கூறினாலும், அது எந்தளவு தூரம் நடைமுறைச் சாத்தியமாக இருக்கும் என்பது கேள்விக்குறிதான்.

உலக சந்தையில் கச்சா எண்ணெய்க்குத் தட்டுப்பாடு இல்லை. கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதற்கான கப்பல் போக்குவரத்திலும் எந்தச் சிக்கலும் இல்லை. அவ்வாறு இருந்தும் தற்போதைய அரசால் கச்சா எண்ணெய் கையிருப்பைத் தொடர்ந்து பேண முடியாது போனமையை ஒரு சாதாரண விடயமாகக் கருதி, கடந்துவிட முடியாது.

உலகளாவியரீதியில் ஏற்பட்ட கொரோனாத் தொற்று, இலங்கையின் பொருளாதாரத்தில் பலத்த தாக்கத்தைச் செலுத்தியிருக்கின்றது என்பதை மறுக்கமுடியாது. அதேநேரம் கொரோனாவின் தாக்கம், இலங்கையில் மட்டுமல்ல, ஏனைய வளர்முக நாடுகளிலும் ஏற்பட்டிருந்தது என்பதையும் ஏற்கவே வேண்டும். அந்த நாடுகளில் உள்ள அரசுகள், பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டெழ சரியான திசையில் பயணிக்கின்றன. ஆனால் இலங்கையில் உள்ள ஆட்சியாளர்களின் செயற்பாட்டால், நாடு இன்னும், இன்னும் அதலபாதாளத்தை நோக்கிப் பயணிக்கின்றது.

அரச செலவினங்களைச் சமாளிப்பதற்கு வாராந்தம் பணத்தை அச்சிட்டும், அடுக்கடுக்காக நாடுகளிடம் இருந்து கடன்களை வாங்கியும் தற்போதைக்கு நிலைமையைச் சமாளித்து, தங்கள் ஆட்சியைத்தக்கவைக்கவே தற்போதைய ஆட்சியாளர்கள் முயற்சிக்கின்றனர். ஆட்சியாளர்களின் இந்த அதிகார மோகமே, மக்களை அத்தியாவசியப் பொருள்களுக்குகூட வரிசைகட்ட வைத்திருக்கின்றது.

நாட்டில் எரிபொருள் கையிருப்பு 15 நாள்களுக்கே உள்ளது என்று தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அபாய எச்சரிக்கை விடுக்கின்றனர். ஆனால், எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்று அரசு கூறிக்கொண்டிருக்கின்றது. எனினும் அரசை நம்புதற்கு மக்கள் தயராக இல்லாத நிலையில், எரிபொருள் நிலையங்களில் வரிசை கட்ட ஆரம்பித்திருக்கின்றனர்.

அந்நியச் செலாவணிக் கையிருப்பு இன்மையே இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் மூலகாரணம். நாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் நாளாந்தம் உயர்வதற்கும், கச்சா எண்ணெய் இறக்குமதியை நிறுத்தியமைக்கும் இதுவே காரணம். ராஜபக்ச அரசோ அதற்குரிய தீர்வைத் தோடாது, அரசியல் சித்து விளையாட்டுக்களிலேயே தொடர்ந்தும் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றது. நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச சில நாள்களுக்கு முன்னர் சமர்ப்பித்த வரவு- செலவுத் திட்டத்திலும் இந்தப் பிரச்சினைக்கான தீர்வு எதுவும் இல்லை.

தற்போதைய அரசின் வெளிநாட்டுக் கொள்கைகளாலும் இலங்கை தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றது. ராஜபக்ச அரசின் சீன சார்பு நடவடிக்கைகள் மேற்கத்தேய நாடுகளுக்கும், அயல்நாடான இந்தியாவுக்கும் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கின்றன. மறுபுறத்தில் அந்நியச் செலாவணிக் கையிருப்பைப் பேணுவதற்காக அரசு இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதில் பாதக விளைவுகளும் இருக்கின்றன.

இலங்கை பொருளாதாரச் சரிவில் இருந்து மீள வேண்டுமானால் ஆடை மற்றும் தேயிலை ஏற்றுமதிகள் என்பன மீண்டெழ வேண்டும். இலங்கை அரசு இறக்குமதிகளை நிறுத்தி, மூடிய பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றுமானால் இந்த ஏற்றுமதித்துறைகள் எதிர்காலத்தில் பாதிப்படையலாம். இலங்கையின் ஆடை ஏற்றுமதியின் முக்கிய சந்தையாக ஐரோப்பா உள்ள நிலையில், ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் "வர்த்தகம் என்பது ஒரு வழிப் பாதை அல்ல" என்று குறிப்பிடப்பட்டிருப்பதும் ஓர் அபாய எச்சரிக்கைதான்.இனவாதத்தை முன்னிறுத்தி, தங்களைக் கதாநாயகர்களாகக் காட்டிக்கொண்டு ஆட்சிக்கு வந்தவர்கள் இப்போது நாட்டை நிர்வகிக்க முடியாது திணறிக் கொண்டிருக்கின்றனர். நாட்டைப் பிளவுபட விடமாட்டோம் என்று தேசப்பற்றாளர்களாகத் தங்களை இனங்காட்டிக் குளிர்காய்ந்தவர்கள், இப்போது முழு நாட்டையும் அடகு வைத்திருக்கின்றனர். இன்னும் பல தசாப்தங்கள் சென்றாலும் மீள முடியாத நெருக்கடிக்குள் நாட்டைத் தள்ளியிருக்கிறார்கள்.

அத்தியாவசியப் பொருள்கள், எரிவாயு, பால்மா என்று வரிசையில் நிற்கும் நிலைமை, இனி எரிபொருளுக்கும் வரும். இது அத்தோடு நின்றுவிடப் போவதில்லை. ஆடத் தெரியாதவரை மேடையேற்றியதன் விளைவை இப்போது மக்கள் இப்போது உணர ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் வெள்ளம் தலைக்கு மேல் போய்விட்டது என்பதுதான் உண்மை...!




# அரசுக்குள் பிடுங்குப்பாடு கம்மன்பில வெளிப்படை



**கொழும்பு, நவ. 16**

**அரசுடன் நாங்கள் சண்டை பிடிப்பது உண்மை தான். தேர்தல் மேடைகளில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காகவே அரசுடன் நாங்கள் சண்டை பிடிக்கின்றோம் - என்று அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்:

வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக, அரசுக்குள் எதிர்க்கட்சியாக செயற்படுவோம் என்று கடிதம் மூலம் மக்களுக்கு உறுதிப்படுத்தியுள்ளோம். இந்த உறுதிப்படுத்தலை, நானும், அமைச்சர் விமல் வீரவன்சவும், 2020ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18ஆம் திகதி, தேர்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டபோது செய்திருந்தோம். எனவேதான் நாம் இவ்வாறு செயற்படுகிறோம். அரசைத் தூய்மைப்படுத்த அரசின் தவறுகளை தவறெனக் கூற எம்முடன் இணையுங்கள் - என்றார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

கடந்தாண்டு பொதுத் தேர்தலில் இலங்கைத் தேர்தல் வரலாற்றில் ஒரு புதிய சுற்றுச்சூழல் எண்ணக்கருவை தோற்றுவித்து, எனக்குக் கிடைக்கும் ஒவ்வொரு விருப்பு வாக்குக்கும் மரமொன்றை நடுவேன் என்று உறுதியளித்திருந்தேன். சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தேர்தல் நடவடிக்கையிலும் ஈடுபட்டேன். அதன் பயனாக அதிக விருப்பு வாக்குகளையும் பெற்றேன். எப்போதும் சுற்றாடலுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் எனக்கு சுற்றுச் சூழலுக்கும், சுற்றாடலுக்கும் அதிகமான பாதிப்பை ஏற்படுத்தும் எரிசக்தி அமைச்சு வழங்கப்பட்டுள்ளது. எனவே சுற்றாடலைத் தூய்மையாக்க எம்முடன் இணைந்து மரம் நடும் நிகழ்ச்சிக்கு ஆதரவை வழங்கவேண்டும் - என்று மேலும் தெரிவித்தார். (ம-4)

## யாழ்.சந்தைகளில் தினமும் தொற்றுநீக்கும் செயற்பாடு

யாழ்ப்பாணம், நவ. 16

யாழ். மாநகர பிரதேசத்திலுள்ள மரக்கறி மற்றும் மீன்சந்தைகளுக்கு தொற்று நீக்கி மருந்துவிசிறும் பணிகள் தினமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என சுகாதாரப் பிரிவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தைகளுக்கு வருகை தரும் நுகர்வோர் மற்றும் வியாபாரிகளின் சுகாதார நலன்கருதி, இந்தத் தொற்றுநீக்கி மருந்து தினமும் இருவேளை விசிறப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் சந்தை வியாபாரிகள் சுகாதார விதிகளைப் பின்பற்றி, தமது வியாபார நடவடிக்கைளை மேற்கொள்ள வேண்டும் என சுகாதாரப் பிரிவினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-17)

## அரச ஊழியர்களின் ஓய்வு வயது நீடிப்பு


### ஆளும் கட்சியும் எதிர்ப்பு

அரச ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதை 65 ஆக உயர்த்தியமைக்கு ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான வீரசுமண வீரசிங்க கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

அரச ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதை 65 ஆக அதிகரிப்பதற்கான தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அவர் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஓய்வூதிய வயதை நீடிப்பதால், அரசுத் துறையில் சேர இருக்கும் இளைஞர்களுக்கு சிக்கலை உருவாக்கும். அரச சேவையாளர்களின் செயற்பாடுகளின் அடிப்படையில் 65 வயது வரை குறைந்த எண்ணிக்கையிலான நபர்களை மட்டும் அனுமதிப்பது பிரச்சினை இல்லை என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-4)

நவம்பர் 2021 **வடமாகாண மரநடுகை மாதம்**



"காடு நம் தாய். தாயிடத்தில் பால் குடிக்கலாமே தவிர, நாம் அவளின் இரத்தத்தையே உறிஞ்சிவிடக்கூடாது."

– தமிழகக் கவிஞர் அறிவுமதி

**சகல பாடசாலைகளும்.....**

றைக்கு உரிய ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு -செலவுத் திட்டத்தின் 2ஆம் வாசிப்புமீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2022 ஆம் நிதியாண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் முன்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை அனைத்துத் துறைகளுக்கும் தேவையான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. எதுவும் குறைக்கப்படவில்லை. அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளது. மாகாணக் கல்விக்கும் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. இலங்கையின் கல்வித்துறையில் இந்த பாதீடானது முக்கிய மைல் கல்லாகும்.

நாட்டில் நடைமுறையிலிருந்த கட்டுப்பாடுகள் ஒக்ரோபர் முதலாம் திகதியே தளர்த்தப்பட்டன. அதன்பின்னர் ஆரம்பப்பிரிவு கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகின. அதன்பின்னர் உயர்தர வகுப்புகளில் கற்பித்தல் நடவடிக்கை ஆரம்பமாகியது. அடுத்தவாரம் ஏனைய வகுப்புகளிலும் கல்வி நடவடிக்கை ஆரம்பமாகும்." என்றார். (த-44)

**எரிபொருள்நிரப்ப......**

எரிபொருள் பற்றாக்குறை ஏற்படாது என்று எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ள போதும், இன்று நாட்டில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளுக்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பதைக் காண முடிந்தது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள எரிபொருள்நிரப்பு நிலையங்களிலும் மக்கள் நேற்றுமாலை தொடக்கம் நீண்டவரிசையில் கூடியிருந்தனர்.

பொதுமக்கள் வழக்கத்துக்கு மாறாக அதிகமாக எரிபொருள் கொள்வனவு மேற்கொண்டால், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-17)

**போதியளவு.....**

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளநிலையில், எரிபொருளுக்குத் தட்டுப்பாடு வரலாம் என்றுகருதி, யாழ்ப்பாண மாவட்டத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் நீண்டவரிசையில் நேற்றுமாலை தொடக்கம் முண்டியடித்தனர். இந்தநிலையில், மாவட்டச் செயலர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (த-இ

**23 இந்திய......**

23 மீனவர்களும் எல்லைதாண்டி மீன் பிடித்தனர் என்பது உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் கடற்படையினரால் அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்களுக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது.

விடுவிக்கப்பட்ட மீனவர்கள் அனைவரும் ஓரிரு நாள்களில் இந்தி யாவுக்கு அனுப்பி வைக்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

அந்த வழக்கு விசாரணையின் பின்னர், அவர்களுக்கு பருத்தித்துறை நீதிவான் மன்று, 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து, அந்தத் தண்டனையை ஓராண்டுக்கு ஒத்தி வைத்து நிபந்தனைகளுடன் விடுதலை செய்தது.

அதுமட்டுமன்றி, மீனவர்கள் பயன்படுத்திய இரண்டு படகுகளும் அவற்றிலிருந்த மீன்பிடி உபகரணங்களும் அரசுடமையாக்கப்பட்டன.

இதனையடுத்து மீனவர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரக அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டனர். ஒப்படைக்கப்பட்ட மீனவர்கள் கொழும்பில் உள்ள மீரீஹானா முகாமில் தங்க வைக்கப்பட்டு ஓரிரு நாள்களில் விமானம் மூலம் தாயகம் திரும்புவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (த-26)

**காரைநகர்....**

தில், மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில், காரைநகர் தோப்புக்காடு நெய்தல் பகுதியைச் சேர்ந்த மோகனதாஸ் பரமேஸ்வரன் (வயது - 18) என்பவரே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்த நபர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றார். இது தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுவருகின்றனர். (த -20,125)

## சீன உரத்தை மீள்பரிசீலிக்க உடன்பாடு எட்டப்படவில்லை

*விவசாய அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு*


சீன உரத்தை மூன்றாம் தரப்பினூடாக மீள்பரிசோதனை செய்வதற்கு எந்தவித உடன்பாடும் எட்டப்படவில்லை என்று விவசாய அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், சீன உரத்தை மூன்றாம் தரப்பினூடாக மீள்பரிசோதனை செய்வதற்கு எந்தவித உடன்பாடும் எட்டப்படவில்லை. சீன நிறுவனம் மீள்பரிசோதனை செய்தாலும், விதிமுறை களின்படி நிராகரிக்கப்பட்ட உரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது - என்றார்.

சீனாவிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட உரத்தில் ஆபத்தை ஏற்படுத்தும் பக்ரீரியா இருப்பது இரண்டு தடவைகள் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ய)

# மரண அறிவித்தல்

## குமாரசாமி சுந்தரமூர்த்தி கமலக்கண்ணன்

### (களபூமி, சத்திரந்தை, கம்பளை)



காரைநகர் களபூமி சத்திரந்தையை பிறப்பிடமாகவும் கம்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரமூர்த்தி கமலக்கண்ணன் (கண்ணன் ஸ்ரோர்ஸ்) அவர்கள் நேற்று (15.11.2021) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி செந்தில்நாயகி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கம்பளை குமாரசாமி அருளம்பல வாத்தியாரின் அன்பு பேரனும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை உமாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், நகுலேஸ்வரியின் பாசமிகு கணவரும், தனுஷனின் (மொறட்டுவை பல்கலைக்கழக இரண்டாம் வருடம், பொருளியற் பிரிவு) பாசமிகு தகப்பனாரும், அருணகிரிநாதர் (குமாரசாமி அன்கோ), காலஞ்சென்ற தேவகுஞ்சரி, ராஜகுமாரி, சாந்தகுமாரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற பரஞ்சோதி (வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ்), சுவர்ணதேவி, சிவயோகன் (குமாரசாமி அன்கோ), சுரேந்திரன் (கிருஸ்ணா ஜூவலரி), சிவசோதி, பரமேஸ்வரி, சந்திரதாஸன் (சங்கரபிள்ளை ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2021) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் 113/6, கண்டி றோட், கம்பளை இல்லத்தில் நடைபெற்று, இறுதிக்கிரியைகளுக்காக கம்பளை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**077 950 5855 (மனைவி)**
**077 027 5846 (மகன்)**
**077 152 3706 (அண்ணன்)**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CR 5923) 1-6

# திட்டமிட்டவாறு இன்று போராட்டம்



கொழும்பு, நவ. 16
பொதுமக்கள் கூடுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ள போதிலும், திட்டமிடப்பட்ட வெகுஜனப் போராட்டம் இன்று முன்னெடுக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கான முதல்படியாக இந்தப் போராட்டம் இருக்கும் என்று கட்சியின் பொதுச் செயலர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

போராட்டம் நடத்தும் திட்டத்தை நாங்கள் அறிவித்ததையடுத்து, அதனைத் தடுக்கும் வகையில் அவசரமாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. எனினும் சுகாதார வழிகாட்டுதல்களை நிச்சயமாகக் கடைபிடித்து, எங்கள் போராட்டத்தை நடத்துவோம். முகக்கவசம் அணிந்து வருமாறும், தனியாள் இடைவெளியை பேணுமாறும் போராட்டக்காரர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - ஆர்ப்பாட்டக்காரர்களை ஒன்று திரட்டுவதற்காக ஹைட் பார்க் திடலைப் பயன்படுத்துவதற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதியை, கொழும்பு மாநகர சபை திரும்பப் பெற்றுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார் (ம-4)

# அரச சேவையை கலைக்க முயற்சி

### *சஜித் கடும் எதிர்ப்பு*



கொழும்பு, நவ. 16
அரச ஊழியர்கள் நாட்டுக்கு சுமை என்று நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளமை நேரடியாகவோ, மறைமுகமாகவோ அரச சேவையைக் கலைப்பதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபட்டுள்ளமையைக் குறிக்கின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

பொதுச்சேவை தற்போது நாட்டால் சுமக்க முடியாத அளவுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. அது நாட்டுக்கு சுமையாக உள்ளது என்று நிதியமைச்சர் தெரிவித்துள்ளார். இது அரசின் நிலைப்பாடு என்றே நாங்கள் கருதுகின்றோம். அதனைக் கண்டிக்கின்றோம்.

அரச ஊழியர்கள் ஓய்வுபெறும் வயதை 60 இலிருந்து 65ஆக உயர்த்துவதாக வரவு-செலவுத் திட்ட யோசனையில் அறிவித்த நிதியமைச்சர் மறுநாள் அரச ஊழியர்கள் சுமை என்கின்றார். அமைச்சர் தனது வரவு-செலவுத்திட்ட யோசனையை மறுநாளே மீறியுள்ளார். தேர்தலில் தங்களை வெற்றிபெற வைத்த அரச ஊழியர்களை அரசு இவ்வாறு நடத்துவது குறித்து நாங்கள் ஆச்சரியப்படவில்லை - என்றார். (ம-4)




# பூஸ்டர் தடுப்பூசி என்பது ஊழல்!

## உலக சுகாதார ஸ்தாபனம் எதிர்ப்பு



கொழும்பு, நவ. 16
கொரோனா வைரஸுக்கான பூஸ்டர் தடுப்பூசி ஓர் ஊழல். அதனை உலக நாடுகள் தடுக்கவும் - நிறுத்தவும் வேண்டும் என உலக சுகாதார ஸ்தாபனம் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.


இது தொடர்பில் அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானம் தெரிவிக்கையில்,

கொரோனாத் தடுப்பூசி உலகின் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்றடைய வேண்டும். வருமானம் குறைவாக உள்ள நாடுகளில் போடப்படும் முதல் டோஸ் தடுப்பூசியைக் காட்டிலும், வளர்ந்த நாடுகளில் ஒவ்வொரு நாளும் சராசரியாக 6 மடங்கு அதிக அளவில் பூஸ்டர் டோஸ்கள் செலுத்தப்படுகின்றன. ஏழை நாடுகளில் முன்களப் பணியாளர்கள், வயதானோர் என இன்னும் ஒரு டோஸ் தடுப்பூசியைக் கூட செலுத்தப்படாத நிலையில் காத்திருக்கின்றனர்

இந்த நிலையில் வளர்ச்சியடைந்த நாடுகளில் ஆரோக்கியமானவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி மற்றும் குழந்தைகளுக்கு தடுப்பூசிகள் செலுத்தப்படுவதில் எந்தவித அர்த்தமும் இல்லை. எத்தனை பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்பதைவிட, எவருக்கெல்லாம் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன என்பது தான் கவனத்தில் கொள்ளப்படவேண்டும் - என்றார். (ச-இ)

# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் விவேகானந்தன் M.A



தோற்றம்: 12.08.1939 மறைவு: 15.11.2021

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் விவேகானந்தன் நேற்று அதிகாலை (15.11.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வல்லி புரம் - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும், இந்தியாவைச் சேர்ந்த அரசூர் - சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும், பத்ஸலா விவேகானந்தன் (USA - M.A) அவரின் அன்புக் கணவரும், அனுரா - கார்த்திகா (Engineer - USA), சுகிர்தா (MA -USA) ஆகியோரின் அன்புத் தந்தையும், மெலிகா (USA), பீட்டர் (USA) ஆகியோரின் மாமனாரும், சந்திராணந்ததேவி (Jaffna) மற்றும் விபுலானந்தன் (Canada) ஆகியோரின் பாசமிகு மூத்த சகோதரனும், கார்த்தீபன் செல்லத்துரை (Software Engineer in London), அருன் சங்கர் முதலியார் (Doctor in - India), விக்கிரம் முதலியார் (Doctor in - USA), நிரோஸா கார்த்தீபன் (Lawer in - London) ஆகியோரின் மாமாவும், காலஞ்சென்ற சுவாமிநாத முதலியார் (BSc - Indian overseas bank), சண்முகசுந்தர முதலியார் (Indian overseas bank), KP. செல்லத்துரை (Central College Teacher), ராதாபாய் (India) மற்றும் மஞ்சுளா (Canada) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற Dr.மாணிக்கம்,கோமதி, சுமதி ஆகியோரின் சகலனும், கோணர், சோய், கலின்,ஸ்ரீநிக்கா ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும், கலாச்சந்திர (BSc-Canada), விஜயராஜ் (Engineer in - Canada), வேட்டி (BSc in Canada), உதயசங்கர் முதலியார் (Doctor in India), நளினி (MSc in India) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.11.2021) அமெரிக்காவில் உள்ளல் இல்லத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**சந்திராணந்ததேவி**
**(சகோதரி)**
**12, Palay Road, Jaffna.**

(cs 41096) (2.6)

# தாழமுக்கம் மேலும் வலுவடையக்கூடும்

## எதிர்வரும் 18ஆம் திகதி ஆந்திராவைக் கடக்கும்

**கொழும்பு, நவ. 16**

**தென் அந்தமான் கடற்பரப்புகளுக்கு மேலாக ஒரு குறைந்த அழுக்கப் பிரதேசம் உருவாகியுள்ளது. இது மேற்கு - வடமேற்கு திசையில் நகரக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. வட அந்தமான் கடற்பரப்புகளுக்கு மேலாக தாழமுக்கமாக வலுவடையக் கூடிய சாத்தியம் உண்டு.**

அது தொடர்ந்தும் மேற்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து, நவம்பர் 18ஆம் திகதியளவில் ஆந்திரப் பிரதேசத்துக்கு அண்மையான கரையைக் கடக்கக்கூடும். எனவே நாட்டுக்கு கிழக்காக உள்ள ஆழம் கூடிய கடற்பரப்புக்களில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் மற்றும் கடலில் பயணம் செய்வோரும் அவதானமாக இருக்க வேண்டும்.

இதேவேளை - மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் வடக்கு மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப் போதுமழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

அநுராதபுரம் மாவட்டத்தில் சிறி தளவான மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஊவா மாகாணத்திலும், அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாடு முழுவதும் மணித்தியாலத்துக்கு 40 தொடக்கம் 50 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் பலத்தகாற்று வீசக் கூடும் என்று வானிலை அவதான நிலையம் எதிர்வுகூறியுள்ளது. (ம-4)





மன்னார், கோந்தைபிட்டியில் பாவனையில் இல்லாத பெரும் நீர்த்தாங்கி ஒன்று இராணுவத்தினரின் உதவியுடன் நேற்றுத் தகர்க்கப்பட்டது. அந்த நீர்த்தாங்கியில் இருந்து அரியவகை ஆந்தை ஒன்று மீட்கப்பட்டுள்ளது. (எ-56-60-213)

# மரக்கறிகளின் விலையால் வியாபாரம் பெரும் பாதிப்பு

கொழும்பு, நவ. 16

நுவரெலியாவில் மரக்கறிகளின் விலைகள் கடுமையாக அதிகரித்தமையால் வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா வாரச் சந்தை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

வாரச்சந்தையில் ஒவ்வொரு கிலோ மரக்கறிகளும் ரூ.400 ஆகவும், தக்காளி கிலோ ரூ.600க்கு அதிகமாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. அத்துடன், இன்னும் சில வாரங்களில் மரக்கறிகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு, மரக்கறிகளின் விலை மேலும் உயருமானால் வியாபாரம் பாதிக்கப்பட்டு, நுகர்வோரும் தாங்களும் மிகவும் சிரமமான நிலையை எதிர்கொள்ள வேண்டிவரும் என்று நுவரெலியா வாரச் சந்தை வியாபாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-ரி)

# சீரற்ற காலநிலையால் 17 மாவட்டங்கள் பாதிப்பு

கொழும்பு, நவ. 16

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக, 17 மாவட்டங்களில் 150 பிரதேச செயலர் பிரிவுகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கொஞ்சம், கொஞ்சமாக வெள்ளம் வடிந்து கொண்டிருக்கின்றது. கடந்த நாள்களில் நிரம்பி வழிந்த குளங்கள், நீர்த்தேக்கங்களில் 90 வீதமான வற்றின் வான் கதவுகள் மீளவும் மூடப்பட்டுள்ளன. சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிக்கும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன.

34 பாதுகாப்பான தங்குமிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 65 ஆயிரத்து 704 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டு இலட்சத்து 34 ஆயிரத்து 640 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 26 பேர் உயிரிழந்துள்ளனர். ஏழு பேர் காயமடைந்துள்ளனர். 49 வீடுகள் முழுமையாகவும் ஆயிரத்து 574 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன - என்றுள்ளது. (ம-4)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின்

# இரண்டாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாட்டில்

# கௌரவம் பெறும் புலமையாளர்கள்

■ பேராசிரியர் ம.இரகுநாதன்
தலைவர், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் ஏற்பாட்டில் சிங்கப்பூர் எஸ்டேட் கந்தையா கார்த்திகேசன் அறக்கொடை நிதியத்தின் முழுமையான நிதிப்பங்களிப்புடன் அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடானது 2020ஆம் ஆண்டுமுதல் நடைபெறத் தொடங்கியுள்ளது. இந்த ஆண்டு இரண்டாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடானது நவம்பர் 16, 17ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது. மாநாட்டை முன்னிட்டு சோமசுந்தரப்புலவரின் 'சிறுவர் செந்தமிழ்', வித்துவான் ந.சுப்பையாபிள்ளையின் ஆராய்ச்சிக் குறிப்புரையுடனான 'தஞ்சைவாணன் கோவை' உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளையின் உரையுடனான 'திருவாதவூரடிகள்புராணம்' ஆகிய நூல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. ஆய்வரங்கம் ஆறு அமர்வுகளாக இரண்டு நாள்களும் நடைபெறவுள்ளது. ஆய்வரங்கக் கட்டுரைகள் தொகுதியாக வெளிவருகின்றது. அதேநேரத்தில் மாநாட்டின் தொடக்கநாள் அன்று ஈழத்துத் தமிழ் இலக்கியத்துக்கும்- மொழிக்கும் பங்காற்றிய ஏழு புலமையாளர்கள் கௌரவிக்கப்படுகின்றார்கள். அவர்களைப் பற்றிய சிறுகுறிப்பாக இது அமைகின்றது.

### பண்டிதர் கதிரிப்பிள்ளை உமாமகேஸ்வரம்பிள்ளை



ஈழத்து மரபு வழிக்கல்வி ஆளுமைகளுள் முக்கியமான மூத்த ஆளுமையாக பண்டிதர் கதிரிப்பிள்ளை உமாமகேஸ்வரம்பிள்ளை விளங்குகின்றார். 1934ஆம் ஆண்டு பிறந்த இவர் ஆசிரியராகவும் பத்திரிகை ஆசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் தனது பன்முக ஆளுமையினால் தமிழுலகுக்குப் பணியாற்றியுள்ளார். இவரது தந்தையார் சி.கதிரிப்பிள்ளை புகழ்பெற்ற தமிழ்ப் பண்டிதர். அவர் சுன்னாகம் குமாரசாமிப்புலவரின் மாணவர் ஆவார். தந்தைவழியிலே தமிழ்ப்புலமைச் சுவட்டைத் தொடர்ந்த இவர் மல்லாகத்தில் நடந்த பண்டித வகுப்பிலே பண்டிதர்கள் அப்புத்துரை, பொன்னுத்துரை, இலக்கணவித்தகர் நமசிவாயதேசிகர் ஆகியோரிடம் படித்துத் தேறினார். பரமேஸ்வராக் கல்லூரியில் கற்கின்ற காலத்தில் சு.நடேசபிள்ளை, நவநீதகிருஷ்ணபாரதி ஆகியோரிடம் கற்கும் பேறுபெற்றவர். ஈழநாடு பத்திரிகை தொடங்கப்பட்ட போது துணை ஆசிரியராகப் பணிசெய்தார். அதுமட்டுமன்றி முரசொலிப் பத்திரிகையின் வாராந்தப் பதிப்பான 'பாற்கடல்' இதழின் ஆசிரியராகவும் பணிசெய்தவர். ஆசிரியர் பயிற்சி பெற்று , ஆசிரியராக மூதூரிலும் யாழ்ப்பாணத்திலும் பணியாற்றினார். தருமபுர ஆதீனம் திருமுறைப் பதிப்பை வெளிக்கொணர்ந்தபோது (1997) அதன் முதல் பத்துத் திருமுறைகளுக்கான பதிப்பாசிரியர்களில் ஒருவராகப் பணிசெய்த பெருமைக்குரியவர். இவரது இலக்கியக்கட்டுரைகள் 'அதிதீரன்' என்ற பெயரில் நூலாகியுள்ளன.

### பண்டிதர் க.ஈஸ்வரநாதபிள்ளை



ஈழத்து மரபுவழி அறிஞர்களுள் பெயர் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க மற்றும் ஒருவர் பண்டிதர் க.ஈஸ்வரநாதபிள்ளை. இவர் நாரந்தனையில் 1937ஆம் ஆண்டில் பிறந்தார். ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ள இவர் ஆங்கிலம், தமிழ் என்னும் இருமொழிகளிலும் புலமைகொண்ட வர், இவ்விரு மொழிகளையும் மாணவர்களுக்குப் பல ஆண்டுகளாகக் கற்பித்து வந்திருக்கின்றார். தமிழிலும், சைவ இலக்கியங்கள், தத்துவங்களிலும் ஆழ்ந்த புலமையுடையவர். தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, வித்துவான் க.வேந்தனார், வித்துவான் ந.சுப்பையாபிள்ளை முதலானவர்களிடம் கற்றுள்ளார். தனது தாய்வழி மாமனாரான தமிழறிஞர் ஆ.சபாரத்தினத்திடமும் பயின்றுள்ளார். ஆலயங்களில் மிக நீண்டகாலமாக சமயச் சொற்பொழிவு ஆற்றிவந்திருக்கின்றார். இலக்கிய மேடைகள் பலவற்றில் சொற்பொழிவாற்றியும் வந்துள்ளார். பண்டிதர் பல பக்தி இலக்கியங்களைப் படைத்துள்ளார். அவை சிறு நூல்களாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. அந்தாதி, நவரத்தின மாலை, இரட்டைமணிமாலை, ஊஞ்சல் பதிகம், கும்மி முதலானவற்றை யாப்புநெறி வழுவாது எழுதுவதில் வல்லவர். இவரது பக்தி இலக்கியங்களின் தொகுப்பு 'உள்ளக் கமலம்' என்ற பெயரில் வெளிவர உள்ளது. மாணவர்களுக்கு எளிய முறையில் இவர் எழுதிய நூல் 'தமிழ் இலக்கணக் கையேடு' என்பதாகும்.

### பண்டிதர் வைகுந்தம் கணேசபிள்ளை



பத்மாசனி அம்மாளில் தொடங்கிய பண்டிதை மரபில் இன்று நமக்குப் பெருமை சேர்ப்பவராக திருமதி வைகுந்தம் கணேசபிள்ளை விளங்குகின்றார். இவர் இணுவிலில் 1939ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி பிறந்தார். ஆசிரியராகப் பல ஆண்டுகள் பணியாற்றிய இவர் சிறந்த மாணவர்கள் பலரை உருவாக்கினார். சைவம், தமிழ் சார்ந்த பலகட்டுரைகளைப் பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் தொடர்ச்சியாக எழுதிவந்தார். முப்பதுக்கும் மேற்பட்ட நாட்டிய நாடகங்கள் இவரால் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் சில சென்றவருடம் நூல் உருப்பெற்றுள்ளன.

இதனைவிட கிராமியப்பாடல்கள், வில்லுப்பாட்டுக்கள் என்பவற்றையும் அவர் எழுதியுள்ளார். மாணவர்களுக்காகப் பல்வேறு படைப்புக்கள் இவரால் எழுதப்பட்டுள்ளன. ஆலயங்களுக்கு ஊஞ்சல், பிள்ளைத்தமிழ், திருப்பள்ளியெழுச்சி முதலானவற்றையும் அதிகமாக எழுதியுள்ளார். அவை சிறுசிறு நூல்களாக வெளிவந்துள்ளன. கலாபூஷணம் முதலாய பலவிருதுகளுக்குப் பெருமை சேர்த்திருக்கின்றார்.

### பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை



பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தில் கற்றுப் பண்டிதராகத் தேறியவர். பண்டிதர்களான ஆறுமுகம், மயில்வாகனன், சிவபாதசுந்தரனார், பொன்.பாக்கியம் ஆகியோரிடத்தில் தமிழ்க்கல்வியைக் கற்றவர். தமிழ்ப் பாடத்தைப் போதிப்பதிலும் வர்த்தகப் பாடத்தைக் கற்பிப்பதிலும் வல்லவராக விளங்கினார். ஆசிரியராக மட்டுமல்ல, அதிபராகவும் காரைநகர் இந்துக் கல்லூரியில் பணியாற்றியவர்.

காரைநகர் மணிவாசகர் சபையின் தலைவராகவும், வட்டுக்கோட்டைத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராகவும் சைவத்துக்கும் தமிழுக்கும் இவர் ஆற்றிய பணிகள் அளவிறந்தவை. பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் தமிழ், சமயம் தொடர்பான ஆழமான கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதிவருகின்றார். இவரது கலைப்பணியைப் பாராட்டி திருவாசக மணி, தமிழ்த்தொண்டன், கலாபூஷணம் ஆகிய விருதுகள் வழங்கப்பட்டன.


### பண்டிதர் ம.ந.கடம்பேஸ்வரன்



பண்டிதர் ம.ந.கடம்பேஸ்வரன் 1947ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை சிந்துபுரத்தில் பிறந்தார். பண்டிதர் ச. பொன்னுத்துரையிடமும் இலக்கணவித்தகர் நமசிவாயதேசிகரிடமும் வரன்முறையாகப் பயின்று பண்டிதரானவர். பண்டித வகுப்புகளை இன்றும் நடத்திவருகின்றார். நூலகவியலில் விஞ்ஞானமாணிப் பட்டத்தைப் பெற்றிருந்த இவர் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் மிகுந்த புலமையுடையவராக விளங்குகின்றார்.

'மூலவேர்' (தமிழ் இலக்கியக்கட்டுரைகள்) 'தீந்தேன்' (சிறுவர் பாடல்கள்), 'பொறுப்பனோ யான்' (இலக்கிய நாடகங்கள்), 'இலக்கணமரபு' ஆகிய பல நூல்களை ஆக்கியுள்ளார். நன்னூலுக்குப் புத்துரை ஒன்றையும் இவர் ஆக்கியுள்ளார். தினக்குரல், முரசொலி முதலிய பத்திரிகைகளில் பணியாற்றியுள்ள இவர் தமிழில் முதுகலைப்பட்டத்தைப் பெற்றதோடு அமையாது தமிழ் முதுகலை மாணவர்களுக்கான வருகைதரு விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

### பண்டிதர் வீ.பரந்தாமன்



கவிஞர், பாடலாசிரியர், பேச்சாளர், எழுத்தாளர் முதலான பல்வேறு நிலைகளில் தன்னை அடையாளப்படுத்தியவர் பண்டிதர் வீ.பரந்தாமன். இவர் 1942ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி பருத்தித்துறை புலோலியில் பிறந்தார். கந்தமுருகேசனாரிடம் மரபுவழியாகத் தமிழ்க் கல்வியைக் கற்ற இவர், பதினொரு நூல்களை எழுதிவெளியிட்டுள்ளார். இவரது நூல்களில் தமிழ் நடந்த தடங்கள், திருக்குறளில் செந்தமிழ் ஆட்சி, பழந்தமிழ் பேச்சுவழக்கு சொற்பிறப்பியல் அகராதி முதலியன குறிப்பிடத்தக்கவை. ஈழவிடுதலைப் போராட்டத்தின்பால் பற்றுக்கொண்ட இவர் 25 க்கு மேற்பட்ட இசைப்பாடல்களை எழுதியுள்ளார். தமிழ் அகராதி உருவாக்கத்திலும் முக்கியமான ஒருவராக விளங்குகின்றார். நாடகத்துறையிலும் பங்காற்றியுள்ளார். தனக்கென்றொரு மாணவர் பரம்பரையை உருவாக்கியுள்ளார். தனித்தமிழ் உருவாக்கப் பணியிலும் குறிப்பிடத்தக்க பங்கை ஆற்றியுள்ளார்.

### பண்டிதர் கலாநிதி செல்லையா திருநாவுக்கரசு



ஈழத்துத் தமிழ் அறிஞர்களுள் மரபு, நவீனம் ஆகிய இரண்டிலும் பாண்டித்தியம் மிக்கவராக பண்டிதர் கலாநிதி செல்லையா திருநாவுக்கரசு விளங்குகின்றார். இவர் அல்லைப்பிட்டிக் கிராமத்தில் 1950ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24ஆம் திகதி பிறந்தார். 1984ஆம் ஆண்டு கலைப் பட்டதாரியாகி அதன் பிறகு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுகலை, முதுகல்விமாணி, கலாநிதிப் பட்டங்களைப் பெற்றுக்கொண்டார். ஆசிரியர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர், பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளர் முதலாய பதவிகளை அலங்கரித்துள்ளார். பண்டிதர், சைவப்புலவர் ஆகிய மரபுவழிப் பட்டங்களையும் தமதாக்கிக் கொண்டவர். இவரது தமிழ் ஆளுமையினால் கலா பூஷணம் முதலாய விருதுகளையும் பெற்றுக்கொண்டார். பா நூல் எழுத்தாளராக ஆசிரியர், மாணவர் மத்தியில் செல்வாக்கு பெற்றுள்ளார். டானியல் எழுத்துக்கள், உடுமலை தந்த க மலை, தமிழ் வளர்த்த தீவகச் சான்றோர்கள் ஆகிய நூல் இவரது ஆய்வுப் புலமைக்குச் சான்றாகின்றன. இவரது கம் மான குரலால் பலமேடைகளை வளப்படுத்தியுள்ளார். இ மரபார்ந்த தமிழ்ச் செழுமைக்கும் நவீனகல்விப் புலமைக்கும் கௌரவம் வழங்கப்படுகின்றது.

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** அரசாங்க விடயத்தில் திடீரென்று நன்மை ஒன்று கிடைக்கும். தொலைபேசி வழி செய்தி மகிழ்ச்சியை தரும். பரபரப்பு கூடும். முயற்சி கைகூடும். நெருக்கமானவருக்காக செலவு செய்ய முன்வருவீர்கள்.

**இடபம்:** அலுவலகத்திலிருந்து நல்ல செய்தி ஒன்று வந்து மகிழ்விக்கும். பணியில் உள்ள ஆர்வம் காரணமாக அது பற்றி மேலும் கற்பீர்கள். கனவுகள் பலிக்கும்.

**மிதுனம் :** குடும்பத்தினர்கள் நடந்துகொள்ளும் முறை மனத்திருப்தி தரும். ஆன்மிக நாட்டம் அதிகரிப்பதாகத் தோன்றும். பயம் நீங்கும். உங்களின் புது முயற்சி நல்ல வகையில் செல்லும்.

**கடகம்:** முயற்சிகள் சற்று நிதானமாகப் பலன் தந்தாலும் முழு நிறைவு தரும். குடும்பத்தினர்களின் தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள். சந்தோஷமான சம்பவங்கள் நிம்மதி அளிக்கும்.

**சிம்மம்:** எதையும் பலமுறை நன்கு யோசித்து செய்வது அவசியம். வம்பில் தலையிட வேண்டாம். புதிய விடயத்தை ஒருநாள் தள்ளிப்போடுங்கள். எதிர்பாராத நன்மை நாடி வந்து இதயத்தை மகிழ்விக்கும் நாள்.

**கன்னி:** முயற்சி காரணமாக உங்களுக்கு மேன்மையும், உயர்வும் கிடைக்கும். சில நாள்களாக மனதில் இருந்து வந்த மனஅழுத்தம் நீங்கும். குழந்தைகளின் வாழ்வில் திருப்பம் ஏற்பட்டு நிறைவளிக்கும்.

பலன்கள் சுமாராக இருக்கும்.

**துலாம்:** உறவினர் ஒருவர் நல்ல செய்தியைச் சொல்லி, உங்களை மகிழ்விப்பார். உறவினர், நண்பருடன் தொலைதூர சுற்றுலா மேற்கொண்டு மகிழ்வீர்கள். உறவினரின் பாச மழையில் நனைவீர்கள்.

**விருச்சிகம்:** வீடு சம்பந்தமான முயற்சிக்கு நண்பர்கள் உறுதுணையாக இருப்பர். கொடுத்த வாக்கை காப்பாற்ற சிரமப்பட்டாலும் அதில் வெற்றி பெறுவீர்கள். தொழில் ரீதியாக புதிய ஊர்களுக்கு செல்வீர்கள்.

**தனுசு:** விலகிச் சென்றவரைப் பற்றி கவலைப்படவேண்டாம். அவரை புறக்கணியுங்கள். நல்லவர்கள் கூறும் ஆலோசனையை ஏற்றுக்கொள்ளுங்கள். சேமிப்பில் ஆர்வம் கூடும்.


**மகரம்:** உடல் நலனில் கவனம் தேவை. தாயாரால் நன்மை ஏற்படும். மன உறுதியுடன் செயற்பட்டு கஷ்டத்தில் இருந்து வெளிவருவீர்கள். அனுபவம் மிக்கவரின் ஆலோசனையை கேட்டு நடப்பதன் மூலம் நன்மை உண்டு.

**கும்பம்:** நீண்ட நாளைய பிரச்சினை ஒன்று உங்கள் முயற்சியால் தீரும். பக்குவமாகப் பேசி அனுமதி ஒன்றைப் பெறுவீர்கள். எதிலும் அவசரம் வேண்டாம். பணியாளர்களுக்கு ஏற்பட்டிருந்த தொல்லை அகலும் நாள்.

**மீனம்:** சுபநிகழ்ச்சி பற்றிய பேச்சுக்கள் நல்ல முடிவை எட்டும். நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த செய்தி அரசாங்கத்திடம் இருந்து வரும். நல்ல விடயம் ஒன்றில் உறவினர்களின் ஒத்துழைப்பு உண்டு.

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## 2021 -2022



குரு பார்க்க கோடி நன்மை என்று கூறுவார்கள். நவகிரகங்களில் சுபக் கிரகமாக விளங்கும் குரு பகவான் பெயர்ச்சியாகும் பொழுது அனைத்து ராசியினருக்கும் நற்பலன்களை வழங்குவார். குருபகவான் நேர்கதியில் **நவம்பர் 13ஆம் திகதி** மகர ராசியில் இருந்து கும்ப ராசிக்கு பெயர்ச்சி ஆகியுள்ளார். மகரம், கும்பம், மீனம் ஆகிய ராசிகளில் பயணம் செய்ய இருக்கும் குருபகவான் 2022ஆம் ஆண்டு என்ன செய்ய இருக்கிறார்? அதனால் 12 ராசிக்காரர்களுக்கும் கிடைக்கப் போகும் பலன்கள் என்னென்ன? என்பதை பார்ப்போம்.




சமயோசித புத்தியும் சாமார்த்தியமும் நிறைந்த கடகராசி அன்பர்களே!
குருபகவான் மகர ராசியில் அமர்ந்து உங்கள் ராசியைப் பார்த்துக்கொண்டிருந்தார். தற்போது அந்த நிலை மாறுகிறது. 13.11.2021 முதல் 13.4.2022 வரை உங்கள் ராசிக்கு எட்டாம் இடத்தில் சென்று மறைகிறார்.
8 இல் குரு நின்றால் பெயருக்குக் களங்கம் ஏற்படுமே என்று அஞ்சிகொண்டிருந்தால் அதை விட்டு விடுங்கள்.
கடக ராசியில் பிறந்த உங்களுக்கு குருபகவான் ஸ்திர வீட்டில் மறைவதால் நற்பலன்களே ஏற்படும். குருபகவானின் பார்வை உங்களுக்கு இரண்டாம் வீடான சிம்மத்தின் மீது படுகிறது.
இது குடும்ப அமைப்பில் மிகவும் நல்ல மாற்றங்களைக் கொண்டுவரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்கும். இதுவரை இருந்துவந்த வீண் சந்தேகம், சங்கடங்கள், சண்டை சச்சரவுகள் நீங்கும். பணப்புழக்கத்தில் இருந்த பிரச்சினைகள் தீரும். சேமிக்கவும் செய்வீர்கள்.
வீட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை வாங்குவீர்கள். மனதில் அமைதி பிறக்கும் . நிம்மதியாக உறங்குவீர்கள். குருபகவான் உங்களின் சுக ஸ்தானத்தைப் பார்ப்பதால் உடல் சோர்வு, வீண் அலைச்சல், பதற்றம் வந்து விலகும்.

### 13.11.2021 முதல் 30.12.2021 வரை

குருபகவான் அவிட்டம் நட்சத்திரத்தில் இந்தக் காலகட்டத்தில் சஞ்சரிப்பதால் திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உண்டாகும். பணவரவு அதிகரிக்கும். புதிய பொறுப்புக்களை ஏற்பீர்கள். வீட்டில் சுபநிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். பிள்ளைகளுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை அமையும். சொந்தமாக வீடு வாங்கும் முயற்சி வெற்றிபெறும்.

### 31.12.2021 முதல் 02.03.2022 வரை

சதயம் நட்சத்திரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் காலகட்டத்தில் தாயாரின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. நின்று போயிருந்த கட்டட வேலையைத் தொடங்குவீர்கள். அரசிடம் எதிர்பார்த்திருந்த உதவிகள் கிடைக்கும். அதே வேளையில் சட்டத்தை மதித்து நடந்துகொள்ளுங்கள். சின்னச் சின்ன விதிமீறல்கள்கூட தண்டம் செலுத்த வேண்டிய நிலைக்குக் கொண்டு விட்டுவிடும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

### 02.03.2022 முதல் 13.04.2022 வரை

குருபகவான் தன் சொந்த நட்சத்திரமான பூரட்டாதி நட்சத்திரத்தில் சஞ்சரிப்பதால் சமூகத்தில் உங்கள் மதிப்பு உயரும். அனைவராலும் பாராட்டப்படுவீர்கள். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். குழந்தை பாக்கியம் எதிர்பார்த்துக்காத்திருக்கும் தம்பதியினருக்கு நல்ல குழந்தைப் பேறு வாய்க்கும். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொண்டு வரவேற்பைப் பெறுவீர்கள். உறவினர்களுடன் இருந்த மனக்கசப்புகள் விலகும். பூர்வீக சொத்துப் பிரச்சினைகள் முடிவுக்கு வரும்.
உங்கள் உழைப்பு இதுவரை போற்றப்படாமல் இருந்த நிலை இனி மாறும். அனைவரும் பாராட்டுவார்கள் திறமைக்கு ஏற்ப ஊதிய உயர்வும் பாராட்டுக்களும் கிடைக்கும்.

**மொத்தத்தில் இந்த குருப்பெயர்ச்சி உங்களுக்குள் இருக்கும் திறமையை வெளிக்கொணர்ந்து வெற்றிபெற வைக்கும்.**



# மாடு பால் கறக்கவில்லை; பொலிஸில் முறைப்பாடு

புதுடில்லி, நவ.16
இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்திலுள்ள பிந்த் மாவட்டத்தில் விவசாயி ஒருவர் தனக்குச் சொந்தமான எருமை மாடு ஒன்று கடந்த சில நாள்க்ளாக பால் கறக்கவிடுவதில்லை என மாட்டைக் கையோடு பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று முறைப்பாடு செய்துள்ளார்.
தனது மாடு பால் கறக்காமையால் சூனியம் வைத்திருக்கலாம் என அயலவர்கள் கூறியதையடுத்தே பொலிஸ் நிலையத்தில் தீர்வு கிடைக்கும் என அவர் மாட்டை அழைத்துச் சென்றுள்ளார்.
இதனால் அதிர்ச்சியடைந்த பொலிஸார், உங்கள் மாட்டுக்கு உடல்நலக்கோளாறு இருக்கலாம். எனவே கால்நடை மருத்துவரிடம் அழைத்து செல்லுங்கள் என அறிவுறுத்தி அனுப்பியுள்ளனர். இந்த நிலையில் மீண்டும் பொலிஸ் நிலையம் வந்த விவசாயி தனது மாடு தற்போது பால் கறக்கிறது எனவும் தகுந்த ஆலோசனை வழங்கிய பொலிஸாருக்கு நன்றி எனவும் தெரிவித்துள்ளார். (ச-இ)

# டெல்லியில் காற்று மாசுபாடு பாடசாலைகளுக்கு விடுமுறை

புதுடில்லி, நவ.16
தலைநகர் டெல்லியில் காற்று மாசு அதிகரித்து ஆபத்தான நிலையை எட்டியதையடுத்து ஒருவாரத்துக்கு பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.
முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் தலைமையில் நடைபெற்ற அவசர ஆலோசனைக் கூட்டத்தில் இதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.
அதற்கமைய அரச அலுவலகங்கள் நூறு சதவீதம் மற்றும் தனியார் அலுவலக ஊழியர்கள் கூடுமானவரை வீட்டில் இருந்தே பணியாற்ற வேண்டும் என்று முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் உத்தரவிட்டுள்ளார். (ச-இ)

# விவசாயிகளுக்கு துப்பாக்கி வழங்க அனுமதிப்பத்திரம்!

## விவசாய அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 16

இரண்டு ஹெக்ரேயருக்கு அதிகமான விளை நிலங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு துப்பாக்கி அனுமதிப் பத்திரம் வழங்க பரிசீலிக்கப்பட்டுள்ளது என விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

காட்டுப்பன்றிகள் போன்ற வனவிலங்குகளால் சேதங்கள் ஏற்படுகின்றன என விவசாயிகளால் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளையடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இலங்கையில் காட்டு விலங்குகளால் விவசாய உற்பத்திகளில் சுமார் 40 முதல் 50 வீதம் வரை வீணடிக்கப்படுகின்றன என விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

5 ஹெக்ரேயருக்கும் அதிகமான பரப்பளவில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கே துப்பாக்கி அனுமதிப்பத்திரம் இதற்கு முன்னர் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# கலைப்பிரிவுப் பட்டதாரிகள் வேலையின்மையால் பாதிப்பு

இலங்கையில் கலைப்பிரிவில் பட்டம் பெற்றோர் வேலையின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என உயர்கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

உயர்கல்வி அமைச்சால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் சுமார் 54.4 வீதமானோர் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரியவந்துள்ளது. அத்துடன், கலைப் பட்டதாரிகளின் தொழில் வாய்ப்புக்கள் குறைவதற்கு தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப பாடத்திட்டம் இல்லாததும், உயர்கல்விக் கொள்கையில் உள்ள சிக்கல்களும்தான் காரணம் என்றும் ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-ரி1)

# வீதிச் சட்டங்கள் குறித்து சாரதிகளுக்கு பயிற்சி

கொழும்பு, நவ. 16

வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு, வீதிச் சட்டங்கள் தொடர்பில் சாரதிகளுக்கு விசேட பயிற்சிகளை வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதல் நவம்பர் மாதம் 10ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வீதி விபத்துக்கள் காரணமாக ஆயிரத்து 948 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார். இந்தநிலையில் குறித்த நடவடிக்கைகளுக்கு அமைய மாகாணங்களுக்கு இடையில் சேவையில் ஈடுபடும் பேருந்துகளின் சாரதிகளுக்கு இரண்டு வாரங்கள் பயிற்சி வழங்கப்படவுள்ளது. (ய-இ)

# பரிசளிப்பு நிகழ்வு

கிளிநொச்சி, நவ.16

கிளிநொச்சி- சோரன்பற்று சி.சி.த.க. பாடசாலையின் 2020ஆம் ஆண்டுக்கான வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலய முன்னாள் ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளரும் , யாழ்.கல்வி வலய அபிவிருத்தி ஆரம்பப்பிள்ளைப் பருவ உதவிக் கல்விப் பணிப்பாளருமான சி.கணேசலிங்கம், சிறப்பு விருந்தினராக பளை கோட்டக்கல்விப் பணிப்பாளர் தி.திலீபன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினர். (ச-159)



# துணுக்காய் பிரதேசசபை
# 2022 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

துணுக்காய் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தை. ஆட்டிறைச்சிகடைகள், மாட்டிறைச்சிக்கடைகள், கோழி இறைச்சி கடைகள் என்பவற்றை 01.01.2022 தொடக்கம் 31.12.2022 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 16.11 2021 - 29.11.2021<br>(அலுவலக நாட்களில் மு.ப8.30 - பி.ப 3.00)

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித்திகதி - 29.11 2021 பி.ப 12.00 மணிவரை

கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி - 29.11 2021 பி.ப 01.00 மணி வரை

கேள்வி திறக்கப்படும் திகதி - 29.11.2021 பி.ப 2.00 மணி

கேள்வி திறக்கும் இடம் - துணுக்காய் பிரதேசசபை அலுவலகம்

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை செயலாளர், துணுக்காய் பிரதேசசபை , துணுக்காய் என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்துக்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை " பிராந்திய உள்ளுராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளுராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு " என்ற முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இறைச்சிக்கடை

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் | மீளளிக்கப்பட கேள்விப் கட்டணம் | முடியாத படிவக் |
|---|---|---|---|---|---|---|
| 01 | ஆட்டிறைச்சிக்கடை | துணுக்காய் | 25,476,00 | 1,500.00 | | 500.00 |
| 02 | மாட்டிறைச்சிக் கடை | துணுக்காய் | 284,291.00 | 2,500.00 | | 500.00 |
| 03 | கோழி இறைச்சிக்கடை | துணுக்காய் | 29,700.00 | 1,500.00 | | 500.00 |
| 04 | ஆட்டிறைச்சிக்கடை | மல்லாவி | 63,250.00 | 1,500.00 | | 500.00 |
| 05 | மாட்டிறைச்சிக் கடை | மல்லாவி | 1,340,500.00 | 2,500.00 | | 500.00 |
| 06 | கோழி இறைச்சிக்கடை | மல்லாவி | 1,124,200.00 | 1,500.00 | | 500.00 |
| 07 | ஆட்டிறைச்சிக்கடை | ஐயன்கன்குளம் | 15,378.00 | 1,500.00 | | 500.00 |
| 08 | மாட்டிறைச்சிக் கடை | ஐயன்கன்குளம் | 132,788.00 | 2,500.00 | | 500.00 |
| 09 | கோழி இறைச்சிக்கடை | ஐயனகன்குளம் | 15,378.00 | 1,500.00 | | 500.00 |

பொதுச்சந்தை

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் | மீளளிக்கப்பட கேள்விப் கட்டணம் | முடியாத படிவக் |
|---|---|---|---|---|---|---|
| 01 | துணுக்காய் பொதுச் சந்தையும், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமும் | துணுக்காய் | 29,791.00 | 1,500.00 | | 500.00 |
| 02 | ஐயன்கன்குளம் பொதுச் சந்தையும், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமும் | ஐயன்கன்குளம் | 29,282.00 | 1,500.00 | | 500.00 |
| 03 | மல்லாவி பொதுச் சந்தையும், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமும் | மல்லாவி | 1,595,000 | 1,500.00 | | 500.00 |

நிபந்தனைகள்:

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் இலங்கை பிரஜையாகவும் தமது ஆள் அடையாளத்தை நிருபிக்கக் கூடியவராகவும் சான்றுகள் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறாகக் கணிக்கப்பட்டவர்கள் என தெரியவருமிடத்து கேள்விகோர தகுதியற்றவர்களாக கருதப்படுவர்.
3. எந்தவொரு கேள்வியையும் காரணம் தெரிவிக்காது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபை தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு. ஆகக் குறைந்த கேள்வி தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
4. வியாபார உத்தரவுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.
5. சபையால் விதிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.
6. எம்மால் நிர்ணயிக்கப்படும் கொல்களத்திலேயே இறைச்சிக்குரிய மிருகங்கள் அறுக்கப்பட வேண்டும்.
7. இறைச்சிக்காக ஆடு , மாடு கொல்லப்பட முன் எம்மால் குறிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைய நடந்து கொள்ள வேண்டும்.
8. மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்
9. சித்தியடையும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப்பணத்தை ஒரு வார காலத்திற்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்

அ.அமிர்தலிங்கம்<br>தவிசாளர்<br>பிரதேசசபை, துணுக்காய்.

(CR 36401) 1-6

# விதிகளை மீறிய 86பேர் கைது

கொழும்பு, நவ. 16

நாடளாவியரீதியில் நேற்றுமுன்தினம் காலை தொடக்கம் நேற்றுக்காலை வரையிலான 24 மணிநேரத்தில், தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் 86 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுவரை 82 ஆயிரத்து 293 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-ரி1)

# வாகன இறக்குமதி தடை தொடரும்

கொழும்பு, நவ. 16

வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட நடை மேலும் ஆறுமுதல் ஏழு மாதங்களுக்கு நீடிக்கப்படும் என நிதியமைச்சின் செயலாளர் ஆர்.எஸ். ஆட்டிகல தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச்மாதம்முதல் வாகன இறக்குமதிக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தற்போதும் வாகன இறக்கு மதி தொடர்பில் உடனடியாக எந்தவொரு முடிவும் எட்டப்படமாட்டாது. நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் வாகன இறக்குமதிக்கு முன்னுரிமை வழங்கமுடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச இ)

## பராமரிப்பாளர் தேவை

கொழும்பில் தங்கியிருந்து முதியவரைப் பராமரிக்கக் கூடியவர் தேவை.
வேதனத்துடன் தங்குமிடம், உணவு வழங்கப்படும். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**தொடர்பு: 077 120 9998**

(CR 5924) 6


# மத்திய குழுவுடன் கலந்துரையாடினார் முன்னணியின் தேசிய அமைப்பாளர் மணி

வவுனியா, நவ. 16

யாழ்ப்பாண மாநகர முதல்வரும் சட்டத்தரணியுமான விஸ்வலிங்கம் மணிவண்ணன், தனது கட்சிக் கட்டமைப்பை விஸ்தரிக்கும் பொருட்டு கட்சியின் மத்திய குழுவைக்கூட்டி கலந்துரையாடியுள்ளார்.

வவுனியா நகரில் உள்ள விடுதி ஒன்றில் நேற்று கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

எதிர்காலத்தில் கட்சியை விஸ்தரிப்பது, அடுத்து மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள், ஆளணியைத் திரட்டல் மற்றும் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் என்பன தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த சந்திப்பில், யாழ். மாநகர முதல்வருடன், மாநகரசபை உறுப்பினர் வ.பார்த்தீபன், நல்லூர் பிரதேசசபை உறுப்பினர் கௌசல்யா, வவுனியா நகரசபையின் முன்னாள் உறுப்பினர் பி.யானுயன், இளங்கோ மாஸ்ரர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் என்ற வகையில் கட்சியின் மத்திய குழுவைக்கூட்டிக் கலந்துரையாடினேன் என்று மணிவண்ணன் தெரிவித்தார். (த-18)

# குழந்தையின் விரலை துண்டாடிய கத்தி

கொடிகாமம், நவ. 15

மீன் வெட்டும் கத்தியை எடுத்து விளையாடிய மூன்று வயது ஆண் குழந்தையின் கைவிரலில் கத்தியின் கூர்ப் பகுதி, தவறுதலாகப் பட்டதால் கைவிரல் துண்டாடப்பட்டது.

இந்தச் சம்பவம், மட்டுவில் பகுதியில் நேற்று இடம் பெற்றது.

அதனையடுத்து, அந்தக் குழந்தை சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளது. (த-159)

## அறிவித்தல்

சாவகச்சேரி பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்ட வரவு செலவுத்திட்டம் 1987 ஆம் ஆண்டு பிரதேச சபைச் சட்டத்தின் 15 ஆம் இலக்க 168 ஆம் பிரிவிற்கமைய தயாரிக்கப்பட்டு 15.11.2021 ஆம் திகதிய சபை அமர்வில் அங்கீகரிக்கப்பட்டு 16.11.2021 ஆம் திகதி தொடக்கம் 29.11.2021 ஆம் திகதி வரை பிரதேச சபையின் தலைமை அலுவலகம், உப அலுவலகங்களில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. அலுவலக நேரத்தில் பார்வையிடலாம் என்பதனை அறியத்தருகின்றேன்.

தவிசாளர்
சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம். 16.11.2021.

(CR 35898) 1-6


## பெண் உதவியாளர் தேவை

வீட்டுப் பணிகளில் உதவியாக இருப்பதற்கு தங்கி நின்றுவேலை செய்யக்கூடிய பணிப் பெண்தேவை
உணவு, உடை, தங்கும் தனிஅறை வசதிகளும் தரப்படும்
சம்பளம் ரூபா.20,000 - 25,000
விரும்பின் மாத விடுமுறை எடுக்கலாம்

**076 484 7171 (நெல்லியடி)**

(CR5926)1-6


## பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்
## சபைநிதி -2021

01. தவிசாளர், பெறுகைக்குழு,வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர் அவர்களினால் தகுதி வாய்ந்த வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட பெறுகைக்காக கோரப்படுகின்றது.

02. தேசியப்போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கமைவாக கேள்விகோரப்படுகின்றது.

03. கேள்விபெற தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள்,பெறுகை ஆவணம் பகுதி 111 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள வழங்குனர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 16.00 மணிவரை 16.11.2021 ஆம் திகதியிலிருந்து 29.11.2021ஆம் திகதி வரை காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

06. ஆர்வமுள்ள வழங்குனர்கள்ஆங்கிலமொழியிலுள்ள பூரணமான கேள்வி ஆவணமொன்றையாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி ,புத்தூர் எனும் முகவரியில் அமைந்துள்ள வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் 16.11.2021 தொடக்கம் 29.11.2021 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் 15.00 மணி வரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா.1000/-(வற் தவிர்த்து) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்படல் வேண்டும்.

07. கேள்வி ஆவணங்களினை இருபிரதிகளில் தயாரித்து 30.11.2021ஆம் திகதி 15:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை,புத்தூர் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது அவர்களது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.கிடைக்கப்பெற்ற கேள்வியின் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

08. கேள்வியானது கேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77 (எழுபத்தேழு) நாட்கள் (15.02.2022) வரையும் செல்லுபடியாகும்.

09. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 22.11.2021ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.

11. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு 5000.00 வினை பணமாக செலுத்தி பற்றுச்சீட்டினை கேள்வி ஆவணத்துடன் இணைக்க வேண்டும்.

12. இக்கேள்வி கோரலில் உள்ளநிபந்தனைகளில் அவசியமேற்படுமிடத்து மாற்றத்தை ஏற்படுத்தல், சேர்த்தல் அல்லது இல்லாது செய்தல் என்பவற்றின் அதிகாரம் கேள்விச்சபைக்கு உண்டு.

| இல | பெறுகை விபரம் | ஒப்பந்த இல | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மீளளிக்கும் பிணை வைப்பு(ரூபா) | வைப்பு செல்லு படியாகும் காலம் |
| 1 | இலத்திரனியல் உபகரணங்கள் | | | | | |
| | 1. Photocopier (நிழற்பட இயந்திரம்)-01<br>11.Desk top Computer(கணனி)-05<br>111.U.P.S-05 | NP/14/41(15)(1)/3/E. Goods/2021 | 01மாதம் | எமது சபையில் அல்லது வடக்கு மாகாண சபையில் அல்லது யாழ்.மாவட்ட செயலகத்தில் வழங்குனராக பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருத்தல் | 5000.00 | 15.02.2022 |

**தவிசாளர்**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு**
**வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்.**
**16.11.2021**

(cr.35895)(2.6)


## வேலையாட்கள் தேவை

A9 வீதி, முறுகண்டியில் இயங்கும் சைவ உணவகத்திற்கும், ஐஸ் கிறீம் உற்பத்தி நிறுவனத்திற்கும் வேலையாட்கள் தேவை. காசாளர், சிட்டை எழுதுனர், உணவு உற்பத்தி செய்பவர்கள், உணவு பரிமாறுவோர், பொதி செய்வோர், ஐஸ்கிறீம் உற்பத்தியாளர், விற்பனை பிரதிநிதி, ஐஸ்கிறீம் பொதி செய்பவர், சுத்திகரிப்பாளர், போன்ற பதவிகளுக்கு, ஆண்/பெண் இருபாலாரும் தேவை. ஆர்வம் உள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் உடன் தொடர்பு கொள்ளவும். (CS 18050) 1-6

**076 935 4332**


## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி உபஅலுவலக ஊழியர்
நலன்புரிச்சங்க அங்கத்தவர் **திரு.ந. கஜமுகன்**
அவர்களின் அன்புத் தாயார்

**நடேசபிள்ளை நாகேஸ்வரி**

கடந்த 2021.11.13 திகதி சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார். அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எம்து ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (cr 35897) (2.6)

**தலைவர்,**
**ஊழியர் நலன்புரிச் சங்கம், மயிலிட்டி உப அலுவலகம்**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வடக்கு பிரதேசசபையில் கடமையாற்றும்
**திரு.ந. கஜமுகன்** அவர்களின் அன்புத் தாயார்

**நடேசபிள்ளை நாகேஸ்வரி**

கடந்த 2021.11.13 திகதி சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார். அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(cr 35896) (2.6)

**ஊழியர் நலன்புரிச்சங்கம்,**
**வலிகாமம் வடக்குபிரதேச சபை, காங்கேசன்துறை,**

## மரண அறிவித்தல்

தோற்றம்
11
08
1946



மறைவு
14
11
2021

**திருமதி மனோகரன் யோகரத்தினம்**

தட்டாதெரு யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் மூத்ததம்பி லேன் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோகரன் யோகரத்தினம் அவர்கள் கடந்த (14.11.2021) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு செல்லம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சிவபாதம் தட்சணாமூர்த்தி மற்றும் காராளசிங்கம், சோதிரட்ணம், சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நவரட்ணம் மனோகரனின் (முன்னாள் CTB அதிகாரி) அன்பு மனைவியும், டிலானி (பெல்ஜியம்), பிரிந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஹரிணி, பவிஷ், மகரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 18052) 1-6

# வேலணை பிரதேச சபை

## 2022ம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வேலணைப் பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மீன்சந்தைகள், இறைச்சிக்கடைகள், சிற்றுண்டிச் சாலைகள், கடைகள் என்பவற்றை 01.01.2022 தொடக்கம் 31.12.2022 வரை குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 16.11.2021 முதல் 30.11.2021 மதியம் 2.00 மணி வரை**
**கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 01.12.2021 பி.ப 1.00 மணி வரை**
**கேள்வி திறக்கும் திகதி :- 01.12.2021 பி.ப 1.30 மணி**
**மீளளிக்கப்படாத கேள்விப் படிவ கட்டணம் ரூ.2000.00**

| தொ இல | சந்தைகளின் பெயர் | மாதாந்த வாடகை | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | 2022 ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|---|
| 1 | வேலணை செட்டிபுலம் மீன்சந்தை | --------- | 5,000 | 19,910.00 |
| 2 | வேலணை அம்பிகைநகர் மீன்சந்தை | --------- | 5,000 | 15,950.00 |
| 3 | சரவணை மீன் சந்தை | --------- | 5,000 | 8,910.00 |
| 4 | அல்லைப்பிட்டி மீன் சந்தை | --------- | 10,000 | 109,100.00 |
| 5 | நயினாதீவு மீன், மரக்கறிச் சந்தை | --------- | 5,000 | 34,100.00 |
| 6 | மண்டைதீவு வாராந்த சந்தை | --------- | 5,000 | 11,550.00 |
| | **வேலணை துறையூர் மொத்த மீன் விற்பனைச் சந்தையும் சந்தையில் அமைந்துள்ள கடைகளும்** | | | |
| 7 | வேலணை துறையூர் மீன்சந்தை (புதியகட்டிடம்) | -------------- | 10,000 | 220,000.00 |
| 8 | கடைஇல-2 | 1,000 | 5,000 | 31,600.00 |
| 9 | கடைஇல-3 சிற்றுண்டிச்சாலை | 1,500 | 5,000 | 99,000.00 |
| 10 | கடைஇல-4 | 1,000 | 5,000 | 34,760.00 |
| 11 | கடைஇல-5 | 1,000 | 5,000 | 38,500.00 |
| 12 | கடைஇல-6 கோழிக்கடை | 1,000 | 5,000 | 37,600.00 |
| | **வேலணை பொதுச்சந்தை (6ம் வட்டாரம்)** | | | |
| 13 | மரக்கறி,மீன் சந்தை | -------------- | 5,000 | 30,500.00 |
| 14 | சிற்றுண்டிச்சாலை | 1,750 | 5,000 | 27,600.00 |
| 15 | கோழிக்கடை | 750 | 10,000 | 230,500.00 |
| | **புங்குடுதீவு முற்றவெளிச்சந்தையும் கடைத்தொகுதியும்** | | | |
| 16 | கோழிக்கடை | 500 | 5,000 | 84,700.00 |
| 17 | கடை இல-5 சிற்றுண்டிச்சாலை | 600 | 5,000 | 46,200.00 |
| 18 | புங்குடுதீவு முற்றவெளி மீன், மரக்கறிசந்தை | ------ | 5,000 | 33,800.00 |
| | **நயினாதீவு கடைத் தொகுதி** | | | |
| 19 | கடை இல - 1 | 1,000 | 10,000 | 120,000.00 |
| 20 | கடை இல - 2 | 1,000 | 10,000 | 120,000.00 |
| 21 | கடை இல - 3 | 1,000 | 10,000 | 120,000.00 |
| 22 | கடை இல - 4 | 1,000 | 10,000 | 120,000.00 |
| 23 | கடை இல - 5 | 1,000 | 10,000 | 120,000.00 |
| 24 | கடை இல - 6 | 1,100 | 11,000 | 132,000.00 |
| 25 | கடை இல - 7 | 1,100 | 11,000 | 132,000.00 |
| 26 | கடை இல - 8 | 900 | 9,000 | 108,000.00 |

**பொதுவான நிபந்தனைகள் :- சந்தை**

1) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
2) கேள்வியில் பங்கு பற்ற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப் படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமூகமளித்தல் வேண்டும்.
3) கோள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை **"தவிசாளர், பிரதேச சபை, வேலணை"** எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியில் **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்"** என்ற முகவரிக்கு **01.12.2021** ம் திகதி நண்பகல் **12 மணிக்கு** முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.
4) பொதுச்சந்தைகளில் இருந்து **500மீற்றர்** சுற்றளவுள்ள எல்லைக்குள் மரக்கறி, பழங்கள், தேங்காய், கோழி, இறைச்சி போன்ற பொருட்கள் விற்பனை செய்ய முடியாது.
5) கடைகள்இ இறைச்சிக்கடைகள் வருடாந்த உரிமத்தினை செலுத்துதல் வேண்டும்.
6) தெரிவு செய்யப்படும் இறைச்சிக்கடைக்குரியவர்கள் கேள்வித் தொகையின் **2/3** பகுதியை **08.12.2021** திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும். பராமரிப்பு வேலைகள் குத்தகைதாரர்களாலேயே சபையின் அனுமதியுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
7) கேள்விப்படிவத்தில் குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் உடன்படிக்கையினை இரத்துச்செய்யும் உரிமை பிரதேச சபைக்கு உண்டு.
8) தவறுநர் பட்டியலில் உள்ளவர்கள் கேள்வி கோரலில் பங்குபற்ற முடியாது.
9) மேலதிக விபரங்களை வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகம், உப அலுவலகங்களிலும், கடமைநேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**நிபந்தனைகள் - கடைத்தொகுதி**

1) ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.
2) கேள்வி கோரலில் சித்தி பெற்றவர்கள் குறித்த கேள்வித் தொகையினை **(Key Money)** ஒரே தடவையில் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினைச் செய்துகொள்ளல் வேண்டும்.
3) மூன்று மாத வாடகையை முற்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
4) மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினைச் செலுத்துதல் வேண்டும். குறித்த மாத வாடகைப் பணத்தினை அடுத்த மாதம் **10**ஆம் திகதிக்குள் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான தாமதக் கட்டணப் பணமாக **10%** அறவிடப்படும் என்பதனையும் கவனத்தில் கொள்ளவும். டிசம்பர் மாதத்திற்குரிய வாடகைப் பணத்தினை டிசம்பர் மாதம் **30ம்** திகதிக்கு முன்னதாக செலுத்துதல் வேண்டும்.
5) சித்திகாரர் வேலணை பிரதேசசபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக் கிணங்க நடந்துகொள்ள வேண்டும்.
6) சுகாதார வைத்திய அதிகாரியின் சிபார்சினைப் பெற்று, சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக் கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமச் சான்றிதழை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
7) கடைகள் யாவும் தற்போதுள்ள நிலையிலேயே கேள்வியில் சித்தி பெற்றவருக்கு வழங்கப்படும்.
8) பராமரிப்பு வேலைகளை சபையின் அனுமதியுடன் செய்வதோடு கழிவகற்றல் என்பவற்றை தாங்களே மேற் கொள்ளல் வேண்டும்.

**திகதி :- 16.11.2021**

**திரு.ந.கருணாகரகுருமூர்த்தி,**
**தவிசாளர்,**
**வேலணை பிரதேசசபை.**

(CR 5922 ) 1-6


# மண்சரிவு அபாய எச்சரிக்கை வெளியேற்றப்பட்ட குடும்பங்கள்

நுவரெலியா, நவ. 16

நுவரெலியா, கொத்மலை கொட்டகபிட்டிய கிராமத்தில் மண்சரிவு ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்பட்ட நிலையில், அங்கு வசிக்கும் சுமார் 20க்கு மேற்பட்ட குடும்பங்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளன என நுவரெலியா மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். இந்தக் கிராமத்தில் சில தினங்களுக்கு முன்னர் நிலத்திலும் வீட்டுச் சுவர்களிலும் வெடிப்பு ஏற்பட்டதை அவதானிக்க முடிந்தது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இந்தக் கிராமம் மண்சரிவு ஏற்படும் ஆபத்துள்ள கிராமம் என அடையாளம் காணப்பட்டுள்ள போதிலும், அங்கிருப்பவர்களை நிரந்தரமாக அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, நவ. 16

பல்வேறு மாவட்டங்களின் சில பிரதேசங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது. இதன்படி கேகாலை, குருநாகல், இரத்தினபுரி, களுத்துறை, கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் பல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-ரி1)

# குண்டுகளுடன் ஒருவர் கைது

கொழும்பு, நவ. 16

பாதுக்க - அருக்வத்த பகுதியில் குண்டுகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பாதுக்க பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின்படி, குறித்த நபரது வீட்டைச் சோதனையிட்டதில் அலுமாரியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மோட்டார் ஷெல் மற்றும் கண்ணீர்ப் புகைக் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. வெடிகுண்டு செயலிழப்புப் பிரிவு வரவழைக்கப்பட்டு, இந்தக் குண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-ரி1)

# அங்கொட லொக்காவின் சகா இந்தியாவில் வைத்துக் கைது

இலங்கையின் பிரபல பாதாள உலகக்குழுவின் தலைவரான அங்கொட லொக்காவின் உதவியாளரை இந்தியாவின் கோயம்புத்தூர் குற்றத்தடுப்புப் பிரிவினர் பெங்களூரில் வைத்துக் கைது செய்துள்ளனர் என இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பு, அதுருகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த இவர், பொலிஸாரால் தேடப்படும் குற்றவாளி எனவும் அவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும் அவருக்குத் தங்குமிடம் வழங்கியவர் என்ற குற்றச்சாட்டில் மேலும் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## இனப்பலமே....

சிங்களக் குடியேற்றங்களுக்கு எதிராக வவுனியா வடக்கில் நேற்று நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டபின்னர் ஊடகங்களுக்கு கருத்துத்தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தமிழர்களுடைய பாரம்பரிய தேசம் கடந்த 70 ஆண்டுகளாகவும், இப்போதைய ஆட்சியாலும், சிங்களக் குடியேற்றங்களாலும், ஆக்கிரமிப்புக்களாலும் மாற்றியமைக்கப்படுகிறது.

தமிழர்களுடைய பெரும்பான்மை இனப் பிரதிநிதித்துவம், இனப்பரம்பல் சீர்குலைக்கப்பட்டு அவர்களுடைய இன அடையாளம் அழிக்கப்படும் நடவடிக்கை இப்போது தீவிரமாக முன்னெடுக்கப்படுகிறது. தமிழ் மக்களுடைய தேசம், கலாசாரம், மதம் எல்லாமே பௌத்த சிங்கள மயமாக்கப்படும் நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பிரதேசங்களோடு அயலில் இருக்கின்ற சிங்களக் கிராமங்களை இணைப்பதன் மூலம் தமிழர்களுடைய பெரும்பான்மையை சீர்குலைத்து தமிழ் இனம் என்கிற பதத்தை அல்லது இனப்பரம்பலையே இல்லாமற் செய்யும் நடவடிக்கைகள் " கோத்தாபய ஆட்சியில் தீவிரமடைந்துள்ளன.

இவற்றைத் தடுத்துநிறுத்தவேண்டும்.

சிங்களக் குடியேற்றங்களை மீளப்பெற வேண்டும், சிங்களக் குடியேற்றங்களை நிறுத்த வேண்டும். தமிழர்களுடைய பிரதேசத்தையும் அவர்களுடைய இனப்பலத்தையும் நிரூபிக்க வேண்டும். அந்த இனப்பலம்தான் எமது தேசத்தையும் மக்களையும் பாதுகாக்க கூடிய ஆட்சியுரிமை வழங்க அத்திபாரமாக இருக்கக் கூடும்.

அத்துடன் இந்த அரசாங்கம் விலைவாசி உயர்வை மேலும் மேலும் அதிகரிக்கின்ற நடவடிக்கையை எடுத்து வருகிறது. அரசாங்க ஊழியர்களாக இருப்பவர்களுக்கு சம்பளம் போதாமல் இருக்கிறது. விவசாயிகள், மீனவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். இந்த வரவு - செலவுத் திட்டத்தால் எமது மக்களுடைய பிரச்சினைகள், நெருக்கடிகள், விலைவாசி உயர்வு போன்றவை எந்த வகையிலும் தீர்க்கப்பட முடியாதவை என்பதை மிகத் தெளிவாக சொல்லிக்கொள்ள விரும்புகிறோம். - என்றார். (த-110)

## சிங்கள....

பெரும் போராட்டம் நடத்தப்பட்டது.

திட்டமிட்ட குடியேற்றத்துக்கு எதிரான மக்கள் போராட்டக் குழு மற்றும் தமிழ் அரசியல் கட்சிகளின் ஏற்பாட்டில் குறித்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள், "எங்கள் நிலம் எமக்கு வேண்டும், தொல்பொருள் திணைக்களமே வரலாற்றை திரிபுபடுத்தாதே, அதிகார இனவெறியை தமிழர்கள்மீது காட்டாதே, சிங்களக்குடியேற்றத்தை நிறுத்து" போன்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு, கோசங்களையும் எழுப்பினர்.

இதேவேளை - போராட்டத்தின் நோக்கம் மற்றும் கோரிக்கை தொடர்பில் ஜனாதிபதிக்கு அனுப்பும் வகையில் மனு ஒன்று வவுனியா வடக்குப் பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான வினோ நோகரராதலிங்கம், சி. சிறீதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்திஆனந்தன், சாந்திசிறீஸ்கந்த ராஜா, பிரதேசசபைகளின் தலைவர்களான ச.தணிகாசலம், யோகன், நகர சபைத் தலைவர் இ.கௌதமன், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் நி.பிரதீபன், மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், செ.மயூரன், ம.தியாகராஜா உட்பட அரசியல் பிரமுகர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (த-110)

(தொடர்புடைய செய்தி 4 ஆம் பக்கம்)

## வீதியைக்.......

மாணவி படுகாயமடைந்தார். இந்தக் கோரச் சம்பவம், நேற்றுக்காலை 8.15 மணியளவில் இடம்பெற்றது. இந்த விபத்தில், திருவாசகம் மதுசாளினி (வயது - 17) என்பவரே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி - ஊற்றுப்புலம் பாடசாலையில் க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி கற்ற மாணவிகள் மூவர், உயர்தரக் கல்வி கற்க அனுமதி பெறும்நோக்கில் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு சென்றுள்ளனர்.

இதன்போது குறித்த மாணவிகள் பாடசாலைக்கு முன்பாக வீதியை, பாதசாரிக் கடவையூடாக கடந்தபோது விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவிகள் வீதியைக் கடந்தபோது, பட்டா ரக வாகனத்தைச் செலுத்திய சாரதி, மாணவிகள் கடந்து செல்வதற்காக வாகனத்தை நிறுத்தியிருந்தார். அந்த வாகனத்தின் பின்புறமாகவந்துகொண்டிருந்த, மின்சார சபை ஒப்பந்தகாரருடைய ஹன்ரர் ரக வாகனமும் பட்டா ரக வாகனத்தின் பின்பாக நிறுத்தப்பட்டது. அந்த இரண்டு வாகனங்களின் பின்புறமாக கண்மூடித்தனமாக வந்த இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து, ஹன்ரர் ரக வாகனத்தை மோதியதில் ஹன்ரர் வாகனம் பட்டாவுடன் மோதி குறித்த வாகனங்கள் மாணவிகளை மோதியதில் விபத்து ஏற்பட்டது என்று ஆரம்ப விசாரணைகளைக்கொ ண்டு பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த மாணவியின் தந்தை, சைக்கிளில் ஊற்றுப்புலத்திலிருந்து கிளிநொச்சிக்கு விறகுவெட்டி விற்பனை செய்யும் நாளாந்தத் தொழிலாளி. மிகவும் வறுமைக்குட்பட்ட நிலையில் தனது மகள் கல்விகற்க வழிவகைசெய்து உயர்தரம் கற்க அனுப்பிய முதல்நாளே இந்தச் சோகம் இடம்பெற்றது என்பது அந்த மாணவியின் குடும்பத்தினரை பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

குறித்த விபத்துத் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

### போராட்டம்

இதேவேளை-

குறித்த விபத்தில் மாணவி உயிரிழந்த நிலையில், அதனைக் கண்டித்தும், தறிகெட்டுஓடும் வாகனங்களின் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அந்தப் பகுதியில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பெற்றோர், மாணவர்கள் எனப் பலரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டத்தில், வீதி ஒழுங்குகளை கடைப்பிடிக்க வேண்டிய பொலிஸார் உரிய காலத்தில் கடமையில் இருப்பதில்லை என்றும் - வாகனச் சாரதிகள் விழிப்புணர்வு இன்றி வாகனங்களைச் செலுத்துதல் மற்றும் 2017 காலப்பகுதியில் பாடசாலை மாணவர்களின் நலன் கருதி கரடிப்போக்குச் சந்தி தொடக்கம் இரணைமடு வரையான பகுதிகளில் காலை 7 தொடக்கம் 8.30 மணிவரை ஏ - 9 பிரதான வீதியில் எந்தவித கனரக வாகனங்களும் பயணிக்கத் தடைவிதித்து நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. அதன்போது விபத்துக்கள் மிகக் குறைவாகவே இருந்தன. தற்பொழுது அந்த நடைமுறை இன்மையால், அனைத்து வகை வாகனங்களும் கடும் வேகத்தில் பயணிக்கின்றன. அவற்றுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். (த-6,214,113)

## எரிபொருளுக்கு.....

வலுசக்தி அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை இன்று (நேற்று) தொடக்கம் 50 நாள்களுக்கு தற்காலிகமாக மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள குறிப்பிட்டளவு அந்நியச் செலாவணியை, அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதிக்கு மட்டும் பயன்படுத்தி அதனை உரியவகையில் முகாமை செய்வதற்காகவே எமக்கு இந்த முடிவை எடுக்க நேரிட்டது.

எமது எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் 51 வருடங்கள் பழமையானது. இங்கு மின் உற்பத்திக்குத் தேவையான 37 வீத எரிபொருள் உற்பத்தி செய்யப்படுகின்றது. விமான நிலையங்களுக்குத் தேவையான எரிபொருள் 19 வீதம் உற்பத்தி செய்யப்படுகின்றது. பெற்றோல் மற்றும் டீசல் 43 வீதமே உற்பத்தி செய்யப்படுகின்றது.

நாட்டில் தற்போது கடும் மழை பெய்வதால், 50 வீத மின்சாரம் நீர்மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்றது. எனவே, மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான எண்ணெய் தமக்கு தற்போது அவசியமில்லை என் மின்சக்தி அமைச்சு எமக்கு தெரியப்படுத்தியுள்ளது.

விமானங்கள் குறுகிய பயணங்களின் போது பயணத்தை ஆரம்பிக்கும் இடத்தில் எரிபொருளைப் பெறலாம். நீண்ட தூர பயணத்துக்கு மட்டுமே இலங்கையால் எரிபொருளை வழங்க வேண்டியுள்ளது.

எனவே, இந்தக் காலப்பகுதியில் அதிக கேள்வி அற்ற மசகு எண்ணெய் இறக்குமதியை தற்காலிகமாக நிறுத்தி, அதற்காகச் செலவிடும் அந்நியச் செலாவணியை பெற்றோல், டீசல், எரிவாயு, மருந்து வகைகள் மற்றும் உணவுப் பொருள்களை கொள்வனவு செய்ய பயன்படுத்த முடியும். மொத்த பெற்றோல் தேவைப்பாட்டில் 14 வீதமும், மொத்த டீசல் தேவைப்பாட்டில் 29 வீதமுமே சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து விநியோகிக்கப்படுகி ன்றது. அந்நியச் செலாவணி பிரச்சினை தீர்ந்த பின்னர், மசகு எண்ணெய் இறக்குமதி மீண்டும் ஆரம்பமாகும். சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தற்காலிகமாக மூடப்படுவதால் நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படாது." - என்றார். (த-44)

## திருமணத்தில்....

கள் கொண்ட சுகாதார விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. கொரோனா தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை பின்பற்ற வேண்டிய புதிய சுகாதார நடைமுறைகள் வழிகாட்டியை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

அதன்படி,

வீடுகளைவிட்டு தேவையில்லாமல் வெளியே செல்வதைத் தவிர்க்கவும். இதன் மூலம் குடும்பத்தில் உள்ள ஏனையவர்களுக்கும் தொற்று அபாயத்தைக் குறைக்க முடியும்.

மெய்நிகர் சந்திப்புக்கள் வலுவாக ஊக்குவிக்கப்படுகின்றன.

மண்டபம், நிகழ்விடத்தில் இடம்பெறும் நிகழ்வுகள், ஒன்றுகூடல்களில் நிகழ்விடத்தின் மொத்தக் கொள்ளளவில் மூன்றில் ஒரு பங்கினரே பங்கேற்க முடியும். மொத்தப் பங்கேற்பாளர் தொகை 150க்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

உள்ளரங்குகளில் நிகழ்விடத்தின் கொள்ளளவில் மூன்றில் ஒரு பங்கினர் 100 பேருக்கு மேற்படாத வகையில் பங்கேற்க அனுமதிக்கப்படுவர்.

வெளிப்புற தனிப்பட்ட கூட்டங்களுக்கு அனுமதி இல்லை.

வர்த்தக மையங்கள் சுகாதார அதிகாரிகளின் கடுமையான மேற்பார்வையின் கீழ் மொத்த வியாபாரத்துக்காக திறக்க அனுமதிக்கப்படும்.

உணவு கையாளும் நிலையங்களில் அதன் கொள்ளளவு திறனுக்கு மூன்றில் ஒரு பங்கினர் பங்கேற்க அனுமதிக்கப்படுவர். மொத்த நபர்களின் எண்ணிக்கை 75க்கு மேற்படலாகாது.

பலசரக்குக் கடைகள், மருந்தகங்கள், பல்பொருள் அங்காடிகள் அதன் கொள்ளளவு திறனில் குறிப்பிட்ட நேரத்தில் மூன்றில் ஒரு பங்குக்கு மேற்படாதவர்கள் அனுமதிக்கப்படலாம்.

வங்கிகள் உள்ளிட்ட நிதி நிறுவனங்களில் ஒரே நேரத்தில் 15 நபர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். மீதமுள்ள வாடிக்கையாளர்கள் மையங்களுக்கு வெளியே ஒரு மீற்றர் இடைவெளியைப் பேணக் கூடியவாறு வரிசையில் நிற்க வேண்டும்.

சலூன்கள், தையலகங்களில் முன்கூட்டிய பதிவுகள் மூலம் வாடிக்கையாளர்கள் அனுமதிக்கப்பட வேண்டும்.

பாடசாலைகள் குறித்து கல்வி அமைச்சு தீர்மானிக்கும்

பகல்நேர பராமரிப்பு நிலையங்கள், முன்பள்ளிகள் திறக்க அனுமதிக்கப்படுகின்றன.

பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட உயர் கல்வி நிறுவனங்கள் குறித்து மானிய ஆணைக்குழு தீர்மானங்களை எடுக்கும்.

தொழிற்பயிற்சி நிறுவனங்கள் அதன் மொத்த கொள்ளளவு திறனில் 50 வீதத்தினரை ஒரே நேரத்தில் அனுமதிக்கலாம்.

நீதிமன்றங்கள் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் வழிகாட்டுதலின் கீழ் செயற்பட வேண்டும்.

திரையரங்குகள் மற்றும் உடற்பயிற்சிக் கூடங்களில் அவற்றின் மொத்த கொள்ளளவு திறனில் 50 வீதமானவர்களை மட்டுமே ஒரே நேரத்தில் அனுமதிக்க முடியும்.

விளையாட்டு நிகழ்வுகளில் பார்வையாளர்கள் அனுமதி இல்லை.

திருமண நிகழ்வுகளின்போது மண்டபத்தின் வழக்கமான கொள்ளளவு திறனில் மூன்றில் ஒரு பங்கினர் பங்கேற்க முடியும். எனினும் 100 பேருக்கு மேற்பட்டவர்கள் கூட அனுமதி இல்லை.

வெளிப்புற நிகழ்வுகளில் 150 பேர் வரை அனுமதிக்கப்படுவார்கள்.

இறுதிச் சடங்குகளில் ஒரே நேரத்தில் 20க்கு மேற்படாதவர்கள் பங்கேற்க முடியும். அத்துடன், ஒருவர் இறந்து 24 மணி நேரத்துக்குள் இறுதிச் சடங்குகள் செய்யப்பட வேண்டும்.

- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (த-இ)

# மாகாணத் தேர்தலில் சு.க. தனித்துப் போட்டி

**கொழும்பு, நவ. 16**

**எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் சுதந்திரக்கட்சி தனித்துப் போட்டியிட வேண்டும் -என்று அநுராதபுரம் மாவட்ட சுதந்திரக் கட்சிக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தலைமையில் அநுராதபுரத்தில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது கட்சி தனித்துப் போட்டியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டால், தொகுதி அமைப்பாளர்களுக்குத் தெரிவிப்போம். அடுத்த மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட விருப்பம் உள்ளவர்கள் இருந்தால், அவர்கள் பொருத்தமானவர்களா என்று பார்த்து விட்டு என்னைச் சந்திக்க வேண்டும் என்று துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

கூட்டத்தில் மாவட்ட பிக்கு முன்னணி, இளைஞர், விவசாய மற்றும் ஆசிரியர் முன்னணி உள்ளிட்ட கட்சியின் மாவட்ட இணைப்பு அமைப்புக்களுக்கு புதிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். எதிர்வரும் தேர்தலில் வெற்றி - தோல்வியைப் பொருட்படுத்தாது சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிட வேண்டும் என்று கட்சியின் இளைஞர் முன்னணியின் புதிய செயலாளராகத் தெரிவு செய்யப்பட்ட சமன் குமார தெரிவித்தார்.

அவரது முன்மொழிவு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (ம-4)



# யாழ்ப்பாணம் மாநகர சபை

**சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடைகள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகள், பல்பொருள் வாணிபக்கடைகள் (நாவாந்துறை), ஒலிபரப்புச் சேவைகள் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான**

## கேள்வி அறிவித்தல் - 2022 (01.01.2022 - 31.12.2022)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2022 ம் திகதி முதல் 31.12.2022 ம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படு கின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 1,000.00
கேள்விப் படிவம் விநியோகித்தல் - 16.11.2021 - 30.11.2021 .(மு.ப 9.00 - பி.ப.3.00 மணி வரை)
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 01.12.2021 மு.ப 10.00 மணி வரை
கேள்வி திறத்தல் - 01.12.2021 10.00 மணிக்கு

விண்ணப்பபடிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

விண்ணப்ப படிவங்களை சமர்ப்பிப்பவர்கள் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 01.12.2021 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

| அல்லது இல | இறைச்சிக்கடை,பல்பொருள் வாணிபம் | கடை இல | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 213,100.00 |
| 2 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 49,629.87 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 177,140.44 |
| 4 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 262,725.00 |
| 5 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 172,000.00 |
| 6 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 83,301.00 |
| 7 | பண்ணை கோழிக்கடை | இல.07 | 5,000.00 | 826,956.00 |
| 8 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 100,500.00 |
| 9 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 970,600.00 |
| 10 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 982,400.00 |
| 11 | செங்குந்தா கருவாட்டுக்கடை | இல.01 | 5,000.00 | 154,691.00 |
| 12 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 311,000.00 |
| 13 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 417,819.00 |
| 14 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 350,550.00 |
| 15 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 360,450.00 |
| 16 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 607,340.70 |
| 17 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 681,074.45 |
| 18 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 548,899.50 |
| 19 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 160,000.00 |
| 20 | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 380,000.00 |
| 21 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 794,091.00 |
| 22 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 379,691.00 |
| 23 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 285,000.00 |
| 24 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 262,000.00 |
| 25 | நாவாந்துறை கோழிக்கடை | இல.10 | 5,000.00 | 438,050.00 |
| 26 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 63,206.67 |
| 27 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 632,950.00 |
| 28 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 652,112.00 |
| 29 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 447,700.00 |
| 30 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 529.692.00 |
| 31 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 525,100.00 |
| 32 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 500,175.00 |
| 33 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7,000.00 | 364,910.00 |
| 34 | குருநகர் பன்றி இறைச்சிக்கடை | | 5,000.00 | 350,728.00 |
| 35 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.04 | 5,000.00 | 305,414.55 |
| 36 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.05 | 5,000.00 | 271,479.60 |
| 37 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.07 | 5,000.00 | 190,884.10 |
| 38 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.08 | 5,000.00 | 169802.02 |
| 39 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.09 | 5,000.00 | 188,593.49 |
| 40 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.11 | 5,000.00 | 56,332.02 |
| 41 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.12 | 5,000.00 | 9792.35 |

### துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகள் , பொதுச்சந்தைக் குத்தகை - 2022

| இல | துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகள் , பொதுச்சந்தை | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| 1 | பெரிய கடை மரக்கறிச் சந்தை | 10,000.00 | 1,865,455.00 |
| 2 | பண்ணை மீன் சந்தை | 10,000.00 | 6,001,637.00 |
| 3 | குருநகர் மீன் சந்தை | 10,000.00 | 5,500,500.00 |
| 4 | செங்குந்தா சந்தை | 10,000.00 | 7,536,000.00 |
| 5 | நாவாந்துறை மீன்சந்தை | 10,000.00 | 606,000.00 |
| 6 | அரியாலை மீன்சந்தை | 1,000.00 | 76,175.75 |
| 7 | பாசையூர் மீன்சந்தை | 2,000.00 | 360,000.00 |
| 8 | பண்ணை மீன் சந்தை சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 166,392.00 |
| 9 | இந்து விடுதிக்கு தெற்குப்பக்கமாகவுள்ள வாகனத்தரிப்பிட பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 217,006.00 |
| 10 | யாழ். பழைய பூங்கா சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 425,612.00 |
| 11 | யாழ். பொது நூலக சிற்றுண்டிச்சாலை | 5,000.00 | 261,819.00 |
| 12 | துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் நிகழ்வுகளின் போது நடாத்தப்படும் சிற்றுண்டிச்சாலை (நாள் ஒன்றிற்கான கட்டணம்) | 1,000.00 | 11,461.19 |
| 13 | நீதிமன்ற துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 2,000.00 | 261,819.00 |

### விளம்பர ஒலிபரப்புச்சேவைகள் குத்தகைக்கு 2022.01.01. - 2024.12.31 (மூன்றுவருடம்)

| இல | ஒலிபரப்பு விபரம் | கேள்வி அடையாள இலக்கம் | மதிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைமுறி விபரம் | |
|---|---|---|---|---|---|
| | | | | தொகை ரூபா | செலுத்தியிருக்கும் காலம் |
| 1 | நவீன சந்தைகட்டிடத்தொகுதி மேல்மாடி | MC/N.M.B/F-08/B.01/2021 | 1.5 மில்லியன் (1,500,000.00) | 30,000.00 | 03.01.2022 |
| 2 | செங்குந்தா சந்தைத் தொகுதியில் மீன்சந்தைக்கு மேல் | MC/S.M/F-08/B.02/2021 | 0.5 மில்லியன் (500,000.00) | 10,000.00 | 03.01.2022 |

மேலதிக தகவல்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் தொலைபேசி இலக்கம் 0212215978 தொடர்புகொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் - பி.ப 3.00 மணிவரை நேரடியாகப் சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர், பெறுகைக் குழு,**
**மாநகர சபை ,**
**யாழ்ப்பாணம்.**

(cr.35900) (2.6)

மன்னாரில்

# இரண்டு நாள்களில் 50 தொற்றாளர்கள்!

மன்னார், நவ. 16

மன்னார் மாவட்டத்தில் இரண்டு நாள்களில் 50 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த 12ஆம் திகதி 41 தொற்றாளர்களும், 13ஆம் திகதி 9 தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர் என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் தெரிவித்துள்ளார்.

12ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 12 பேரும், நானாட்டானில் 7 பேரும், மன்னார் பொதும ருத்துவமனை, அடம்பன் மருத்துவமனை ஆகியவற்றில் தலா 6 பேரும், வங்காலை மருத்துவமனையில் 3 பேரும், மாந்தை மேற்கு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு மற்றும் பேசாலை மருத்துவமனை ஆகியவற்றில் தலா 2 பேரும், முருங்கன், நானாட்டான் மற்றும் எருக்கலம்பிட்டி மருத்துவமனைகளில் தலா ஒருவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

13ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் முருங்கன் மருத்துவமனையில் 3 பேரும், நானாட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேரும், மன்னார், நானாட்டான், எருக்கலம்பிட்டி மற்றும் சிலாவத்துறை மருத்துவமனைகளில் தலா ஒருவரும் தொற்றாளர்களாக உறுதி



செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைவாக இந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட ஆயிரத்து 768 அன்டிஜென் பரிசோதனை மற்றும் 238 பி.சி.ஆர். பரிசோதனை ஆகியவற்றில் 292 தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-60)

## கொரோனா பரவ காரணமாகாதீர்கள்

*அரசியல் கட்சிகளிடம் கோரிக்கை*

நாட்டில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த சுகாதாரத்துறை முன்னெடுத்த திட்டங்களை, அரசியல் காரணங்களுக்காக தலைகீழாக மாற்றவேண்டாம் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம், அனைத்து அரசியல் கட்சிகளையும் கேட்டுள்ளது.

இதுதொடர்பில் அதன் தலைவர் உபுல் ரோஹண தெரிவிக்கையில்:ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட பல அரசியல் கட்சிகள் இன்று கொழும்பில் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு தயாராகி வருகின்றன. அரசுக்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ போராட்டங்களை நடத்துவது சுகாதாரத்துறைக்கு பிரச்சினை இல்லை. இந்த நேரத்தில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவது சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்தும். அனைவரும் சுகாதாரச் சட்டங்களுக்கு இணங்குவது மிகவும் முக்கிய மானது. கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணி- என்றார். (ம-4)

**Rani Farm**
1 நாள் ஊர் கோழிக்குஞ்சுகள், வான் கோழிகள் விற்பனைக்கு உண்டு.
077 3322 433
(CS 18051) (1/6)

**வேலையாள்கள் தேவை**
Lovely Flower Cent
பெண் வேலை ஆள்கள் தேவை.
தொடர்பு: 077 400 5023
(cs 41131) (2.6)

**சாரதி தேவை - Driver Vacancy**
யாழில் உள்ள முன்னணி கட்டட நிர்மாண நிறுவனமொன்றிற்கு கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் அனுபவமுள்ள சாரதி தேவை.
தொடர்பு: 077 077 0003
(cs 41097) (2.6)

**வேலையாட்கள் தேவை**
யாழ் பிரதான வீதியில் விடுதி, ஹாட்வெயர் போன்றவற்றிற்கு ஆண், பெண் வேலையாட்கள் தேவை.
076 5846 523, 077 7759 235
(CS 18049) 1-6

## சுமன ரத்தின தேரர் போராட்டம் முடங்கிய பிரதேச செயலகம்!

மட்டக்களப்பு, நவ. 16

மட்டக்களப்பு, பட்டிப்பளைப் பிரதேச செயலகத்தின், பிரதேச செயலாளரின் அறையை முற்றுகையிட்டு, மங்களராம விகாராதிபதி அம்பிட்டிய சுமன ரத்தின தேரர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

இதனால் பட்டிப்பளைப் பிரதேச செயலகத்தின் நடவடிக்கைகள் முற்றாக முடங்கின. கெவிழியாமடுப் பகுதியில் வன இலாகாவுக்குரிய காணியை, விகாரை அமைப்பதற்குக்கோரி அவர் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

பிரதேச செயலரையும், ஊழியர்களையும் அச்சுறுத்தும் வகையிலும், அவர்களது கடமைக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலும் அம்பிட்டிய சுமன ரத்தின தேரர் செயற்படுகின்றார் என்று பலர் விமர்சித்துள்ளனர். (ம-4)





## பாதிக்கப்பட்டோருக்கு உதவிப் பொருள்கள்

கொடிகாமம், நவ.16

வலி.கிழக்கு பிரதேசசபைக்குட்பட்ட ஊரெழு கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, இடம் பெயர்ந்து முன்பள்ளியில் தங்க வைக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் லண்டன் கிளையின் அனுசரணையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலர் உணவுப் பொருள்கள் மற்றும் உடுபுடைவைகளும் வழங்கப்பட்டன.

இதனை வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், சாவகச்சேரி நகர சபையின் முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர் மற்றும் ஊரெழு கிராம அபிவிருத்திக் கழகத்தின் தலைவர் முகுந்தன் ஆகியோர் இணைந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கி வைத்தனர். (ச-159)

**பணிப்பெண் தேவை**
யாழ். நகருக்கு அண்மையில் வசிக்கும் மூதாட்டி ஒருவரைப் பராமரிக்கக்கூடிய அனுபவம் உள்ள பெண் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தங்குமிடம், உணவு வசதி வழங்கப்படும்.
தொடர்பு: 076 753 1111
(CR 5925) 6

விண்ணக வாழ்வின்
10 ஆம் ஆண்டு நினைவு நாள்
அமரர்
T. பீற்றர்சன் விஜயசிங்கம்
(வரி மேற்பார்வையாளர், Director Of Shamrock)



தாய்மடியில் 25.09.1945
இறையடியில் 16.11.2011
நீங்கள் இறைவன் பாதத்தில் சேர்ந்து பத்து ஆண்டுகாலம் ஆகிவிட்டது!
இறப்பில் தான் முடிவில்லா வாழ்வு பிறக்கும்
நீங்கள் எம்மீது காட்டிய அன்பையும் ஆதரவையும் மறப்போமோ
அனுதினமும் உங்களுக்காக வேண்டுகின்றோம்
உங்கள் நினைவுகளுடன் சுமந்து வாழும் நாம்.
குடும்பத்தினர்
(Shamrock ஈச்சமோட்டை)
(cs.41118) (2.6)

## ஆர்ப்பாட்டத்துக்கு தடையுத்தரவு: கோரிக்கையை மன்று நிராகரிப்பு

கொழும்பு, நவ. 16

ஐக்கிய மக்கள் சக்தியால் இன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆர்ப்பாட்டத்துக்கு தடையுத்தரவு பிறப்பிக்க இரண்டு நீதிமன்றங்கள் மறுத்துள்ளன.

சட்டவிரோதமான ஆர்ப்பாட்டங்களைத் தடுப்பதற்காக பொலிஸார் நீதிமன்றங்களை நாடியிருந்தனர். பொலிஸாரின் அந்தத் தடையுத்தரவுக் கோரிக்கையை மாளிகாகந்த மற்றும் கங்கொடவில ஆகிய நீதிமன்றங்கள் நிராகரித்துள்ளன. (ம-4)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.